தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**22.11.2013**

**மதுரையில் இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

மதுரை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில், வேளாண்மை தொடர்புடைய அனைத்துத் துறை அலுவலர்கள் பங்கேற்கின்றனர். ஆகவே, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் இக் கூட்டத்தில் பங்கேற்று, விவசாயம் தொடர்பான தங்களது குறைகளைத் தெரிவித்துப் பயன்பெறலாம் என ஆட்சியர் சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

**வரத்து அதிகரிப்பு: கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறி விலை சரிவு**



கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறி வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்து காணப்பட்டது.

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தமிழகம் மற்றும் ஆந்திரம், கேரளம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து லாரிகள் மூலம் காய்கறிகள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகின்றன. தற்போது, வரத்து அதிகரித்ததால் காய்கறிகளின் விலை சற்று குறைந்துள்ளது.

இதுகுறித்து கோயம்பேடு வெங்காய வியாபாரிகள் சங்க ஆலோசகர் செளந்தரராஜன் கூறியது: தக்காளி, உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலை தொடர்ந்து அதே நிலையில் நீடிக்கிறது. சென்னையின் திண்டுக்கல்,மதுரை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் காய்கறிகள் வரத்து அதிகரித்துள்ளதால் வியாழக்கிழமை பெரும்பாலான காய்கறிகள் கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ.20 வரை விலை குறைந்துள்ளது என்றார்.

வியாழக்கிழமை நிலவரப்படி காய்கறிகளின் விலை விவரம் (பழைய விலை அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது):

அவரைக்காய் ரூ.15 (35)

கேரட் ரூ.30 (40)

காளிபிளவர் ரூ.20 (23)

பெரிய வெங்காயம் ரூ.55 (60)

சின்ன வெங்காயம் ரூ.65 (70)

புடலங்காய் ரூ.15 (18)

முட்டைக்கோஸ் ரூ.13 (17)

நூல்கோல் ரூ.12 (20)

பாகற்காய் ரூ.20 (24)

தக்காளி ரூ.40 (40)

உருளைக்கிழங்கு ரூ.25 (25)

**தமிழகம், புதுவையில் இன்று மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுவையில் வெள்ளிக்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வானிலை முன்னறிவிப்பு: தென் தமிழகத்தின் சில இடங்களில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்யும். வட தமிழகம் மற்றும் புதுவையில் ஆங்காங்கே மழை பெய்யும்.

சென்னையைப் பொருத்தவரையில் வானம் பொதுவாக மேக மூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்யும்.

தமிழகத்தில் வியாழக்கிழமை காலை வரை பெய்த மழை அளவு(மில்லி மீட்டரில்): குளச்சல் - 120, தக்கலை - 90, இரணியல் - 80, அம்பாசமுத்திரம் - 60, தென்காசி - 40, பேச்சிப்பாறை, பாபநாசம் - 30, குழித்துறை - 20, சாத்தூர், கன்னியாகுமரி, ராமநாதபுரம், மதுரை, சிவகாசி - 10.



வங்கக் கடலில் உருவான ஹெலன் புயல் ஆந்திர மாநிலம், மசூலிப்பட்டினம் அருகே வெள்ளிக்கிழமை பிற்பகல் கரையைக் கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: வங்கக் கடலில் கடந்த சில நாள்களுக்கு முன்பு உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை, ஹெலன் புயலாக வலுவடைந்தது.

இது சென்னைக்கும் ஆந்திரத்துக்கும் இடையில் கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இது திசைமாறி, ஆந்திரம் நோக்கி நகர்ந்தது. இதையடுத்து, வியாழக்கிழமை வரையிலான நிலவரப்படி ஆந்திர மாநிலம் மசூலிப்பட்டினத்தில் இருந்து தென்கிழக்கே 210 கி.மீ. தொலைவிலும், விசாகப்பட்டினத்தில் இருந்து 190 கி.மீ தொலைவிலும், ஓங்கோலில் இருந்து 320 கி.மீ. தொலைவிலும் புயல் நிலைகொண்டிருந்தது.

இந்த புயல் ஆந்திர மாநிலம் மசூலிபட்டினம் அருகில் வெள்ளிக்கிழமை பிற்பகல் அல்லது மாலையில் கரையைக் கடக்கும். புயல் கரையைக் கடக்கும்போது மணிக்கு 100 முதல் 120 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசும்.

**மீனவர்களுக்கு எச்சரிக்கை:**

ஹெலன் புயல் காரணமாக தமிழகம் மற்றும் புதுவை கடல் பகுதிகள் கொந்தளிப்புடன் காணப்படும். இதனால் மீனவர்கள் கடலுக்குள் செல்லும்போது எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

**மீனவர்கள் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு: புதுவை முதல்வர் கோரிக்கை**

இலங்கை கடற்படையினரால் தமிழக, காரைக்கால் மீனவர்கள் தாக்கப்படும் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என முதல்வர் என்.ரங்கசாமி வலியுறுத்தி உள்ளார்.

புதுவை அரசு மீன்வளத் துறை மூலம் ஆண்டுதோறும் உலக மீன்வளம் மற்றும் மீனவர் தின விழா நடத்தப்படுகிறது. அதன்படி புதுவை காலாப்பட்டில் வியாழக்கிழமை மீனவர் தின விழா நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் எஸ்.பி.தீபக்குமார் வரவேற்றார். மீன்வளத் துறை அமைச்சர் என்.ஜி. பன்னீர்செல்வம் தலைமை வகித்தார். விழாவைத் தொடங்கி வைத்து முதல்வர் ரங்கசாமி பேசியதாவது:

இலங்கை கடற்படையினரால் காரைக்கால், நாகை மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதற்கு மத்திய அரசு நிரந்தரத் தீர்வு காண வேண்டும். மீனவர் பிரச்னை தொடர்பாக இந்திய-இலங்கை அரசுகள் இடையிலான பேச்சுவார்தையில் புதுவை-காரைக்கால் மீனவர்களும் பங்கேற்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக பிரதமருக்கு கடிதம் அனுப்பியுள்ளேன்.

மீனவர்கள் பஞ்சாயத்தை வரும் ஜனவரியில் கூட்ட அரசு முடிவு எடுத்துள்ளது.

மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த முதியோருக்கு தற்போது வழங்கப்படும் ஓய்வூதியம் ரூ. 1,150-லிருந்து ரூ. 1,250 ஆக உயர்த்தப்படும். இது வரும் ஜனவரி முதல் வழங்கப்படும்.

டீசல் மானியத் தொகை மீண்டும் வழங்கப்படும். இது தொடர்பாக பத்து நாள்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும்.

மீனவர் மேம்பாட்டுக் கழகம்: புதுவையில் மீனவர் மேம்பாட்டுக் கழகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்கான கோப்பினை தயாரித்து ஆளுநருக்கு அனுப்பியுள்ளோம். அவர் ஒப்புதல் கிடைத்தவுடன், விரைவில் மீனவர் மேம்பாட்டுக் கழகத்தை அமைப்போம் என்றார் அவர்.

இந் நிகழ்ச்சியில் அமைச்சர்கள் பெ.ராஜவேலு, ஜி.பன்னீர்செல்வம், தி.தியாகராஜன், சந்திரகாசு, சட்டப்பேரவைத் தலைவர் வா.சபாபதி, எம்.எல்.ஏ.க்கள் கல்யாணசுந்தரம், அன்பழகன், நந்தா சரவணன், லட்சுமி நாராயணன், பி.புருஷோத்தமன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

தேர்வுகளில் சிறப்பிடம் பெற்ற மாணவ, மாணவியருக்கு ரொக்கப் பரிசும், விபத்தில் இறந்த 2 மீனவர் குடும்பங்கள் மற்றும் தானே புயலால் பாதிக்கப்பட்ட 18 பைபர் படகு உரிமையாளர்களுக்கு தலா ரூ.1 லட்சம் வீதம் என மொத்தம் ரூ.56.25 லட்சம் வழங்கப்பட்டது

**கருவலூரில் கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கை**

அவிநாசி கருவலூரில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கைகளை ஊராட்சி நிர்வாகத்தினர் புதன்கிழமை மேற்கொண்டனர் .

ஒன்றிய ஆணையாளர் பால்ராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜகோபால் ஆகியோர் மேற்பார்வையில், கருவலூர் ஊராட்சி மன்றத் தலைவர் அவிநாசியப்பன் தலைமையில் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் கருவலூர், நைனாம்பாளையம், காளிபாளையம், அரசுப்பம்பாளையம், மருதூர் உள்ளிட்ட பகுதிகளில் மாட்டுத் தொழுவத்தில் பிளிச்சிங் பவுடர், நோய் தடுப்பு மருந்துகள் தெளிக்கப்பட்டது. விவாயிகளுக்கு கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. கருவலூர் கால்நடை மருத்துவர் சுசீலா, ஊராட்சி துப்புரவுப் பணியாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்

**வேளாண்மை கருவிகளின் செயல்பாடு குறித்த பயிற்சி முகாம்**

கூடலூர் பாடந்தொரை கிராமத்தில் விவசாயிகளுக்கான வேளாண்மை கருவிகளின் செயல்பாடுகள் குறித்த பயிற்சி முகாம் வியாழக்க்கிழமை நடைபெற்றது.

தோட்டக் கலைத் துறை சார்பில் இந்த பயிற்சி முகாமிற்கு உதவி தோட்டக் கலை இயக்குநர் எஸ்.ஷிபிலா மேரி  தலைமை வகித்தார். உதவி மண்வள பாதுகாப்பு அலுவலர் எம்.சுந்தரலிங்கம் துறை சார்ந்த திட்டங்கள் குறித்தும் வேளாண்மை கருவிகளின் செயல்பாடுகள் குறித்தும் விளக்கமளித்தார்.

துணை தோட்டக்கலை அலுவலர் கே.கே.சந்திரன், உதவி அலுவலர் ஆர்.அம்பிராஜ் ஆகியோர் நுண்ணுயிர் உரங்கள் மற்றும்

மண்புழு, மட்கும் உரங்களின் செயல்பாடுகள் குறித்து விளக்கமளித்தனர்.

**கோமாரி நோய் தாக்குதல் எதிரொலி பரதராமி மாட்டுச் சந்தை மூடல்**

கோமாரி நோய் தாக்குதல் எதிரொலியாக குடியாத்தத்தை அடுத்த பரதராமியில் வாரம்தோறும் வியாழக்கிழமை நடைபெறும் மாட்டுச் சந்தை மூடப்பட்டது.

மாவட்ட ஆட்சியர் இரா.நந்தகோபால் உத்தரவையடுத்து வட்டாட்சியர் எம்.கஜேந்திரன் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார். பரதராமி சந்தைக்கு ஆந்திர மாநிலத்திலிருந்து லாரிகள் மூலம் கொண்டு வரப்பட்ட மாடுகள் திருப்பி அனுப்பப்பட்டன.

அதைத் தொடர்ந்து வட்டாட்சியர் கஜேந்திரன் தலைமையில் வருவாய்த் துறையினரும்,  கால்நடைத் துறை மண்டல இணை இயக்குநர் டாக்டர் கமலநாதன் தலைமையில் கால்நடைத் துறையினரும், குடியாத்தம் அருகே ஆந்திர மாநில எல்லைகளான சைனகுண்டா, பரதராமி ஆகிய இடங்களில் உள்ள சோதனைச் சாவடிகளுக்குச் சென்று அங்குள்ள ஊழியர்களிடம் ஆந்திர மாநிலத்திலிருந்து வாகனங்களில் வரும் மாடுகளை தமிழகத்துக்குள் அனுமதிக்க வேண்டாம் என உத்தரவிட்டனர்.

**நேரடி நெல் விதைப்புக் கருவியைப் பயன்படுத்தினால் குறைந்த செலவில் அதிக மகசூல் பெறலாம்**

நேரடி நெல் விதைப்பு கருவியைப் பயன்படுத்தினால் குறைந்த செலவில் அதிக மகசூல் பெற முடியும் என்று வேளாண்மைத் துறையின் துணை இயக்குநர் சந்திரசேகரன் கூறினார்.

அட்மா திட்டத்தின் சார்பில், போளூர் வட்டார வேளாண்மைத் துறையின் சார்பில் விவசாயிகளுக்கு நேரடி நெல் விதைப்பு கருவி, கோனாவீடர் கருவி, உரம் உள்ளிட்ட கருவிகள் வழங்கும் விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில் கருவிகளை வழங்கி வேளாண்மை துணை இயக்குநர் சந்திரசேகரன் பேசியது: விவசாயிகள் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி திருந்திய நெல் சாகுபடியைக் கையாள வேண்டும். விவசாயத்தை அதிகரிக்க பல்வேறு கருவிகளை வேளாண்மைத் துறை வழங்கி வருகிறது. தமிழக அரசு வழங்கும் மானியத்தை விவசாயிகள் பெற மனு செய்ய வேண்டும்.

தரமான விதையை வேளாண்மை அலுவலகத்தில் விவசாயிகள் பெற வேண்டும். பருவத்துக்கேற்ற விதையை விவசாயிகள் வேளாண்மைத் துறை அலுவலர்களிடம் ஆலோசனை செய்து பயிர் செய்ய வேண்டும்.

இயற்கை விவசாயத்தை விவசாயிகள் நடைமுறைப்படுத்த வேண்டும். இயற்கை உரமாக காட்டு தழை, மாட்டுச் சாணம், மரங்களின் இலை ஆகியவற்றை நிலத்துக்கு உரமாக பயன்படுத்த வேண்டும் என்றார். இதையடுத்து, தோட்டக்கலைத் துறையின் சார்பில் 2 விவசாயிகளுக்கு உயரிய விதை, உரம், மல்பரி உள்ளிட்டவை வழங்கப்பட்டன.

வேளாண்மை உதவி இயக்குநர் கோ.கண்ணகி, அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் வீரபாண்டியன், தொழில்நுட்ப வல்லுநர்கள் செல்வராசு, ராஜ்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**கோமாரி நோய் தடுப்பு மருத்துவ முகாம்**

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு அருகே செல்லியம்பட்டியில் வியாழக்கிழமை கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது.

தருமபுரி மாவட்டத்தில், கடந்த சில மாதங்களாக கால்நடைகளுக்கு கோமாரி நோய் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. இந்த நோயினால் நூற்றுக்கணக்கான கால்நடைகள் உயிரிழந்தன.

மாவட்டத்தில் கால்நடைகளின் உயிரிழப்பை கட்டுப்படுத்த கால்நடைத்துறையினர் சார்பில் 5 மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு நோய் தடுப்பு மருத்துவ முகாம்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதில், வியாழக்கிழமை பாலக்கோடு மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியங்களைச் சேர்ந்த செல்லியம்பட்டி, சங்கம்பட்டி மற்றும் ஆலாபுரம் ஆகிய ஊராட்சிகளில் கால்நடை மருத்துவ முகாம்கள் நடைபெற்றன.

இதில், செல்லியம்பட்டியில் நடைபெற்ற முகாமை மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் நேரில் ஆய்வு செய்து பேசியது:

தருமபுரி மாவட்டத்திலுள்ள 4 வயதுக்கு மேற்பட்ட கால்நடைகளுக்கு நோய் தடுப்பூசி போட வேண்டும். நோய் தாக்குதல் குறித்து அருகிலுள்ள கால்நடை

மருத்துவர்களுக்கும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள 1077 என்ற எண்ணுக்கு தகவல் தெரிவித்து நோய் பாதிப்பிலிருந்து கால்நடைகளை காத்துக் கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர். இதில், கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர்கள் எஸ்.இளங்கோவன், அர்த்தனாரி மற்றும் மருத்துவக் குழுவினர் உடனிருந்தனர்.

**மலர்க் கண்காட்சிக்குத் தயாராகிவரும்  கொடைக்கானல் பிரையண்ட் பூங்கா**

கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் சீசன் காலத்தில் நடைபெற உள்ள மலர்க் கண்காட்சிக்காக, நடவு உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவிலுள்ள மலர்களை பார்த்து ரசிப்பதற்காகவே சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகின்றனர். 1900 ஆம் ஆண்டில் ஆங்கிலேய வன அலுவலர் எச்.டீ. பிரையண்ட் என்பவரால் உருவாக்கப்பட்ட இப் பூங்காவானது, பின்னர் அவரது பெயரிலேயே அழைக்கப்பட்டு வருகிறது. யூகலிப்டஸ், பைன், சைப்ரஸ் போன்ற காட்டு மரங்களைக் கொண்டு சுமார் 20 ஏக்கர் வனப் பகுதியாக இருந்த இப் பகுதியை, எழில்மிகு பூங்காவாக மாற்றிய பெருமை அவரையே சாரும்.

கொடைக்கானல் நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள ஏரியின் மிக அருகாமையில் இப் பூங்கா அமைந்துள்ளது. இங்கு, ஆண்டுதோறும் மே மாதத்தில் மலர்க் கண்காட்சி நடத்தப்படுவது வழக்கம்.

53 ஆம் ஆண்டு மலர்க் கண்காட்சிக்காக 150-க்கும் மேற்பட்ட மலர்பாத்திகள் உருவாக்கப்பட்டு, பிரையண்ட் பூங்காவிலும், செட்டியார் பூங்காவிலும் சுமார் 4 லட்சம் மலர் நாற்றுகள் நடவுசெய்ய திட்டமிடப்பட்டு, அதற்கான முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதில், ஆண்டு மலர்களான சால்வியா, ஆண்டிரைனம், கொரியாப்சிஸ், அரிஸ்டோ மேரியா, டெய்சி, பேன்சி, டெல்பீனியம், பிங் ஆஸ்டர், கெஜேனியா உள்ளிட்ட 20 வகையான செடிகளும் மற்றும் டெயேந்தஸ், பாப்பி, காஸ்மாஸ்,

பிட்டோனியா, அலிவிசம், கிரைசான்திமம் உள்ளிட்ட 30 வகையான குறுகிய கால மலர்களின் நடவுப் பணிகளும் தொடங்க உள்ளன.

மேலும், கொல்கத்தாவிலிருந்து அரிய நிற டேலியா வகை பூக்களின் கிழங்குகள் கொண்டுவரப்பட்டு, நடவு செய்யப்பட உள்ளன. இதுவரை சுமார் 1,500 மலர் நாற்றுகள் நடவு செய்யப்பட்டு, அதற்கு உரமிடுதல், மருந்து தெளித்தல், மண்புழு உரமிடுதல் போன்ற பராமரிப்புப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இப் பூங்காவில் 1993 ஆம் ஆண்டு ரூ. 5 லட்சம் செலவில் 250 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்ட கண்ணாடி மாளிகையில், பெகோனியா,பிரைமுலா மற்றும் அழகிய 90 வகையான கற்றாழை, கள்ளி வகைச் செடிகள், பெரணி வகைச் செடிகளும், அரிய வகை ஆர்க்கிட் மலர்களும் என மொத்தம் 3 ஆயிரம் அழகுச் செடிகள் பூந்தொட்டிகளில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இதுகுறித்து, தோட்டக்கலை துணை இயக்குநர் ராஜாமுகமது கூறுகையில், இந்த மலர்க் கண்காட்சிக்காக பிரையண்ட் பூங்காவில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த ஆண்டை காட்டிலும் 2014 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள கண்காட்சியில் வெளி மாநில வகை மலர்கள் கொண்டுவரப்பட்டு, சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் அமைக்கப்பட உள்ளதாகத் தெரிவித்தார்.

**பூண்டி ஏரியில் நீர்மட்டம் உயர்வு**

வறண்ட நிலையில் உள்ள பூண்டி ஏரி தொடர் மழை காரணமாக கிருஷ்ணா கால்வாய் வழியாக நீர்வரத்து அதிகரித்துள்ளதால் பூண்டி ஏரியின் நீர்மட்டம் சிறிது உயர்ந்துள்ளது.

கோடை வெப்பம், பருவமழை பொய்த்துப் போனது உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் மொத்தமுள்ள 3 ஆயிரத்து 231 மில்லியன் கன அடி கொள்ளளவைக் கொண்ட பூண்டி ஏரி கடந்த சில வாரங்களுக்கு முன்பு வரை 250 மில்லியன் கன அடி வரை மட்டுமே இருப்பாக இருந்தது.

இதனால் அணையைச் சுற்றி மட்டுமே தண்ணீர் தேங்கியிருந்தது. மற்ற இடங்களில் வரலாறு காணாத அளவுக்கு நீர் வற்றி ஏரி மேய்ச்சல் நிலமாக மாறியது. இந்த நிலையில் கடந்த சில நாள்களாக பெய்த மழையாலும், கிருஷ்ணா

கால்வாயில் இருந்து வரும் அதிக தண்ணீராலும் பூண்டி ஏரியின் நீர்மட்டம் சிறிது உயர்ந்துள்ளது.

பூண்டி ஏரியில் வியாழக்கிழமை நிலவரப்படி மொத்தமுள்ள 35 அடி உயரத்தில் 24.15 அடியும், மொத்தமுள்ள 3,231 மில்லியன் கன அடி கொள்ளவில் 729 மில்லியன் கன அடி நீரும் இருப்பு உள்ளது. இந்த நிலையில் ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து வரும் கிருஷ்ணா கால்வாய் பகுதியில் பெய்த மழை மற்றும் கண்டலேறு தண்ணீர் சேர்த்து வினாடிக்கு 580 கன அடியாக நீர் வரத்து உள்ளது.

இங்கிருந்து செம்பரம்பாக்கம், புழல் ஆகிய ஏரிகளுக்கு வினாடிக்கு 355 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

இனி வரும் காலத்தில் புயல் மழை பெய்தால் மட்டுமே பூண்டி ஏரியில் நீர்மட்டம் கனிசமாக உயரும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**"உணவுப் பொருள் விற்பனை நிறுவனங்கள் பதிவு செய்ய வேண்டும்**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள உணவுப் பொருள் விற்பனை நிறுவனங்கள் வரும் பிப்ரவரி 4-ஆம் தேதிக்குள் தங்களது நிறுவனங்களை உணவுப் பாதுகாப்புத் துறையில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று கூடுதல் ஆணையர் டாக்டர் வாசகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உணவுப் பொருள் விற்பனை நிறுவனங்கள் தங்களது நிறுவனங்களை உணவுப் பாதுகாப்புத் துறையில் பதிவு செய்து கொள்வது குறித்த விழிப்புணர்வுக் கூட்டம், காஞ்சிபுரத்தில் புதன்கிழமை நடந்தது.

இதில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வியாபாரிகள் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு உணவுப் பாதுகாப்புத் துறை கூடுதல் ஆணையர் டாக்டர் வாசகுமார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

உணவுப் பாதுகாப்புச் சட்டப்படி பெட்டிக் கடைகள் முதல் அனைத்து உணவுப் பொருள் விற்பனை நிறுவனங்களும் உணவுப் பாதுகாப்புத் துறையில் கட்டாயம் பதிவு செய்து கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து விளக்கினார். மேலும் காலாவதியான உணவுப் பொருள்களை உடனுக்குடன் கடைகளில் இருந்து அகற்றிவிட வேண்டும்.

தயாரிப்பு தேதி, பயன்பாட்டுக் காலம் குறித்து எவ்வித தகவலும் இல்லாத பாக்கெட் பொருள்களை கடைகளில் விற்பனை செய்யக் கூடாது. அவ்வாறு விற்பனைக்கு வைத்திருந்தால், உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் அவற்றை பறிமுதல் செய்து அழித்து விடுவர். இட்லி மாவு, முருக்கு உள்ளிட்ட குடிசைத் தொழில் தயாரிப்பு பொருள்களுக்கு இது போன்ற விதிமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளன.

ஆனால் தரமுள்ள பொருள்களை வாங்கி விற்பனை செய்ய வேண்டும் என்றார். இதைத் தொடர்ந்து அவர் கூறியது: உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை மத்திய அரசு 2006-ஆம் ஆண்டு கொண்டு வந்தது. இச்சட்டம் 2011 ஆகஸ்ட் 5-ஆம் தேதி அமல்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின்படி பெட்டிக் கடைகள் முதல் மளிகைக் கடைகள், மருந்துக் கடைகள், தள்ளுவண்டி உணவகங்கள் உள்ளிட்ட அனைத்து வகை உணவகங்கள் உள்பட உணவுப் பொருள்கள் விற்பனை செய்யும் அனைவரும் உணவுப் பாதுகாப்புத் துறையில் பதிவு செய்து கொள்ள வேண்டும். ஆண்டுக்கு ரூ. 12 லட்சம் வரை வியாபாரம் செய்யும் பெட்டிக் கடைகள் முதல் அனைத்து வகை நிறுவனங்களும் ரூ. 100 செலுத்து தங்களது நிறுவனங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

ஆண்டுக்கு ரூ. 12 லட்சத்துக்கு மேல் விற்பனை செய்யும் நிறுவனங்கள் ரூ. 2 ஆயிரம் செலுத்தி உரிமம் பெற்றுக் கொள்ள வேண்டும். வரும் 2014 பிப்ரவரி 4-ஆம் தேதிக்குள் அனைத்து நிறுவனங்களும் இதை நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும் விவரங்களுக்கு காஞ்சிபுரம் மாவட்ட உணவுப் பாதுகாப்புத் துறை நியமன அலுவலர் ஜெகநாதனை 94440 23090 என்ற செல்போன் எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றார் வாசகுமார். இக்கூட்டத்தில், உணவுப் பாதுகாப்புத் துறை துணை இயக்குநர் டாக்டர் மணிமாறன், காஞ்சிபுரம் மாவட்ட நியமன அலுவலர்

டாக்டர் ஜெகநாதன் மற்றும் உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### 22-ல் விவசாயிகள் குறைதீர்வு கூட்டம்

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வரும் நவம்பர் 22-ஆம் தேதி விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் நடைபெற உள்ளதாக ஆட்சியர் கா.பாஸ்கரன் அறிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு வரும் நவம்பர் 22-ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் நடைபெற உள்ளது.இக்கூட்டத்தில், அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு விவசாயம் மற்றும் விவசாயம் தொடர்பான கோரிக்கைகள் குறித்து மனுவாக அளிக்கலாம்.

### மலிவு விலை சப்பாத்தி அறிமுகம் எப்போது?

ஈரோடு மாநகராட்சி எல்லைக்குள்பட்ட அம்மா உணவகங்களில் மலிவு விலை சப்பாத்தி எப்போது அறிமுகப்படுத்தப்படும் என்று அம்மா உணவக வாடிக்கையாளர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

ஈரோடு மாநகராட்சியில் காந்திஜி சாலை, கொல்லம்பாளையம், மரப்பாலம், பேபி மருத்துவமனை, சூரம்பட்டி, சூளை, வ.உ.சி. பூங்கா, பி.பி.அக்ரஹாரம், சூரியம்பாளையம், கருங்கல்பாளையம் ஆகிய 10 இடங்களில் அம்மா உணவகங்கள் செயல்பட்டு வருகின்றன.

இங்கு ரூ.1-க்கு இட்லி, ரூ.5-க்கு சாம்பார் சாதம், ரூ.3-க்கு தயிர்சாதம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு உணவகத்திலும் தினமும் 300 பேர் சாப்பிடும் வகையில் காலை மற்றும் மதிய நேரங்களில் மலிவு விலை உணவு வழங்கப்பட்டு வருகிறது.

ஈரோடு நகரில் தொழில் நிறுவனங்கள், அரசு அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்கள் கூட நீண்ட வரிசையில் காத்திருந்து அம்மா உணவகங்களில் சாப்பிட்டு வருகின்றனர். இந்நிலையில், சென்னை அம்மா உணவகங்களில் ரூ.3-க்கு 2 சப்பாத்தி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதேபோல ஈரோடு மாநகராட்சியில் உள்ள அம்மா உணவகங்களிலும் அறிமுகப்படுத்த வேண்டும் என்று வாடிக்கையாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இது குறித்து ஈரோடு மேயர் ப.மல்லிகா பரமசிவத்திடம் கேட்டபோது, சென்னையில் உள்ள அம்மா உணவகங்களில் மட்டும்தான் இப்போது மலிவு விலை சப்பாத்தி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஈரோட்டில் அம்மா உணவகத்துக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. எனவே, இங்கும் சப்பாத்தி வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதாவுக்கு கோரிக்கை விடுத்துள்ளோம். முதல்வரிடம் இருந்து அனுமதி கிடைத்தவுடன் இங்கும் செயல்படுத்தப்படும் என்றார்.

**கோமாரி நோயைக் கட்டுப்படுத்துவது எப்படி?**

கால்நடைகளைப் பாதிக்கும் கோமாரி நோயைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து கால்நடைப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் அறிவுரை வழங்கியுள்ளது.

இதுகுறித்து, அம் மையத்தின் தலைவர் பேராசிரியர் சிவக்குமார் வெளியிட்ட செய்தி:கோமாரி நோயானது நச்சு உயிரியால் உண்டாகும் தொற்று நோயாகும். இந் நோய் மாடு, எருமை, செம்மறி ஆடு, வெள்ளாடு, பன்றி மற்றும் ஒட்டகம் ஆகிய உயிரினங்களைப் பாதிக்கும். நோயில் இருந்து விடுபட்ட பின் மாடுகள் நோய் பரப்பியாகவும், செம்மறி ஆடுகள் நோய் நிலை நிறுத்தியாகவும், பன்றிகள் நோய் பெருக்கியாகவும் செயல்படுகின்றன.

நோய் பரவும் முறை: கோமாரிநோய் பாதிக்கப்பட்ட கால்நடைகளின் சிறுநீர், பால், சாணம் மற்றும் உமிழ் நீர் மூலமாகப் பிற கால்நடைகளுக்குப் பரவுகிறது. இதுதவிர தீவனம், தீவனத் தொட்டிகள், குடிநீர், குடிநீர்த் தொட்டிகள் மூலமாகவும் பரவுகின்றன.

நோய் அறிகுறிகள்: கால்நடைகளுக்கு அதிகமான காய்ச்சல் காணப்படும். உள்வாய், நாக்கு, மூக்கு, கால், பால் மடி ஆகிய இடங்களில் கொப்புளங்கள் தோன்றும். வாயிலிருந்து நுரை கலந்த உமிழ் நீர் ஒழுகியபடி இருக்கும். கால்நடைகள் அசைபோடுவதால் கொப்புளங்கள் உடைந்து புண்ணாகிவிடும்.

இதன் காரணமாக சரியாகத் தீவனம் உட்கொள்ளாது. கால் குளம்புகளிலும் புண்கள் காணப்படுவதால் நடக்க இயலாது.

கட்டுப்படுத்தும் முறைகள்: கால்நடைகள் இடம்பெயர்வதைத் தவிர்க்க வேண்டும். நோய் பரவியுள்ள பகுதியிலிருந்து கால்நடைகளை வாங்கக் கூடாது. சந்தைக்கு வரும் கால்நடைகளோடு மற்ற கால்நடைகள் சேர்வதைத் தவிர்க்க வேண்டும். நோயுள்ள கால்நடைகளை சந்தைக்கு கொண்டு செல்லக் கூடாது.

நோய் பாதிக்கப்பட்ட இடங்களில் தீவனங்கள் வாங்கக் கூடாது. நோயுள்ள கால்நடைகளிலிருந்து இளம் கன்றுகளைப் பிரித்து தனியாகப் பராமரிக்க வேண்டும். நோய் பாதிக்கப்பட்ட தாயிடம் பால் குடிக்க அனுமதிக்கக் கூடாது. நோயுள்ள கால்நடைகளைப் பராமரிப்போர் தங்களின் கை, கால்கள் மற்றும் பயன்படுத்திய துணிகள், பால் கறக்கப் பயன்படுத்திய பாத்திரங்கள், உபகரணங்களை நான்கு சதவீத சோடியம் கார்பனேட் கரைசல் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். கால்நடைகளின் இருப்பிடத்தில் சுண்ணாம்புத்தூள் கலந்த நீரைத் தெளிக்க வேண்டும். நோயுள்ள கால்நடைகளின் கால்களையும், குளம்புகளையும் 2 சதவீத காப்பர் சல்பேட் கரைசல் கொண்டு கழுவ வேண்டும். மேலும், நோய் எதிர்ப்பு மருந்தை கால், குளம்புகளிலுள்ள புண்களில் தடவ வேண்டும்.

நோயுற்ற கால்நடைகளின் வாய், நாக்கை ஒரு சதவீத பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசல் கொண்டு ஒரு நாளைக்கு 3 முறை கழுவ வேண்டும். கோமாரி நோய் தடுப்பூசி போட வேண்டும். முதல் தடுப்பூசி மூன்று மாதத்திலும், இரண்டாவது தடுப்பூசி, முதல் தடுப்பூசி போட்ட 21 நாளில் இருந்து 30 நாளுக்குள் போட வேண்டும். பின்னர், 4 மாதத்திற்கு ஒருமுறை தடுப்பூசி போட வேண்டும்.

**ராஜபாளையம் பால் உற்பத்தியாளர் சங்கத்துக்குப் பரிசு**

ஆர்.56 ராஜபாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் மாவட்ட அளவில் முதன்மை சங்கமாக தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றுள்ளது.

60ஆவது அகில இந்திய கூட்டுறவு வார விழா அண்மையில் விருதுநகரில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் டி.என். ஹரிஹரன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் மாவட்டத்தில் முதன்மை சங்கமாக ராஜபாளையத்தில் இயங்கும் ஆர்.56 ராஜபாளையம் பால் உற்பத்தியளர்கள் கூட்டுறவு சங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இதற்கான பரிசை மாவட்ட ஆட்சியர் டி.என். ஹரிஹரன் ராஜபாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத் தலைவர் எம்.பி. முருகையாபாண்டியனிடம் வழங்கினார். அப்போது கூட்டுறவு சங்க மேலாளர் இ. அப்பர்சாமி, மேற்பார்வையாளர் எஸ். ரவிச்சந்திரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**கோமாரி நோயிலிருந்து கால்நடைகளை காப்பாற்றும் வழிமுறைகள்**

தமிழகத்தில் தற்போது கால்நடைகளை கோமாரி நோய் தாக்கி வருவதால், விவசாயிகள் நஷ்டமடைந்து வருகின்றனர்.

ஈரோடு, திருச்சி, திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் இந்நோய் தாக்கி, கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும், இந்நோய் காரணமாக, தேனி அருகே உப்பார்பட்டியில் மூன்று மாடுகள் இறந்துள்ளன. எனவே, கால்நடைகளுக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்நோய் பரவாமல் தடுக்கும் வகையில், தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

இது குறித்து, தேனி உழவர் பயிற்சி மைய பேராசிரியர் மற்றும் தலைவர் இரா. உமாராணி மற்றும் தேனி கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் பாலகிருஷ்ணன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

பாதிக்கப்பட்ட கால்நடைகளின் உமிழ்நீர், சிறுநீர், சாணம், பாதிக்கப்பட்ட கால்நடைகளின் கழிவு கலந்த தீவனம், பண்ணைகளில் உள்ள பொருள்கள், தண்ணீர் மூலமாகவும், பறவை, விலங்குகள் மற்றும் மனிதர்கள் நடமாட்டம்

மற்றும் காற்று மூலமாகவும் சுமார் 300 கிலோ மீட்டர் தூரம் வரை இந்நோய் பரவக்கூடியது. இந்நோய் தாக்கிய கால்நடைகள் முதலில் அதிக காய்ச்சலுடன் சோர்வுற்று காணப்படும். நாக்கின் மேல்புறம், மேலண்ணம், உதடுகளின் உள்புறம், ஈறுகள், மேல்தாடை மற்றும் கன்னங்களின் உள்புறம் கொப்புளங்கள் காணப்படும்.

இதனால், தீவனங்கள் உட்கொள்ளாது. கால் குளம்புகளில் கொப்புளம் ஏற்பட்டு, நாளடைவில் குளம்புகள் கழன்றுவிடும். பால் கறக்கும் மாடுகளின் காம்புகளில் கொப்புளங்கள் ஏற்பட்டு, பாலை உண்ணும் கன்றுகளுக்கு தீவிர இதய தசை அழற்சியினால் இறந்துவிடும். நோய் பாதித்த மாடுகளை தனியே பிரித்து, வாய் அல்லது கால் புண்களை ஒரு சதவீதம் பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசல் அல்லது வெது வெதுப்பான நீரில் சிறிது உப்பு கலந்து தெளிக்கவேண்டும். வாய் புண்களுக்கு கிளிசரின் அல்லது போரிக் ஆசிட் பவுடரை தேங்காய் எண்ணெயில் கலந்து ஒரு நாளைக்கு 3-4 முறை தடவவேண்டும்.

கால் புண்களுக்கு லோரெக்சான் போன்ற ஆன்டிசெப்டிக் களிம்பு தடவலாம். அல்லது போரிக் பவுடரை வேப்ப எண்ணெயில் கலந்து தடவலாம். கொட்டகையில் 40 கிராம் சலவை சோடாவை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து கழுவினால், நோய்க் கிருகிமிகள் அறவே ஒழிந்துவிடும். நோய் பாதித்த கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்பக்கூடாது.

மேலும், குளம், ஆறுகளில் கழுவுவதோ அல்லது தண்ணீர் காட்டுவதோ கூடாது. நோய் பாதித்த கால்நடைகளை பராமரிப்பவர்கள் மற்ற கால்நடைகளை அணுகக்கூடாது. தொழுவத்தை சுண்ணாம்பு கொண்டு வெள்ளையடிக்க வேண்டும்.

கால்நடைகளுக்கான குடிநீரில் 100 லிட்டருக்கு 5 கிராம் ப்ளீச்சிங் பவுடரை கலந்து கொடுக்கவேண்டும். அனைத்து கால்நடைகளுக்கும் ஒரே நேரத்தில் தடுப்பூசி போட வேண்டும்.

கோமாரி நோய் வராமல் தடுக்க, கன்றுகளுக்கு 4 மாதத்திலும், ஆடுகளுக்கு 8 ஆவது வாரத்திலும் முதல் தடுப்பூசியும், ஒரு மாதம் கழித்து இரண்டாவது தடுப்பூசியும் போடவேண்டும்.

பின்னர், ஒவ்வொரு 6 மாதத்துக்கு ஒரு தடுப்பூசி கண்டிப்பாக போடவேண்டும். தடுப்பூசி போட்டு 2 அல்லது 3 வாரத்துக்குப் பிறகு நோய் எதிர்ப்பு திறன் கிடைக்கிறது. எனவே, அக்காலகட்டத்தில் கால்நடைகளை வெளியே அழைத்து செல்லக்கூடாது.

மேலும், நோயின் அறிகுறிகள் தென்பட்டால், உடனே கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி சிகிச்சை அளித்தால், நோயிலிருந்து எளிதில் கால்நடைகளை காப்பாற்ற முடியும் என்றனர்.

**சித்த மருத்துவ மூலிகைக் கண்காட்சி**

சித்த மருத்துவ மூலிகைக் கண்காட்சி சென்னை அரும்பாக்கத்தில் உள்ள அரசு சித்த மருத்துவக் கல்லூரி வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை (நவ.24) வரை நடைபெறுகிறது.

வியாழக்கிழமை தொடங்கப்பட்ட இந்தக் கண்காட்சியில் 800 வகையான மூலிகைச் செடிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட செடிகள் எந்த வகை நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுகிறது என்பது குறித்து பொதுமக்களுக்கு விளக்கப்படும். மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஆடைகள், மூலிகை பலகாரங்கள், மூலிகை உணவு உள்ளிட்டவை கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

மேலும் சித்த மருத்துவ ஆலோசனை, நிலவேம்பு குடிநீரின் முக்கியத்துவம் போன்றவை குறித்து விளக்கும் ஸ்டால்களும் இடம்பெற்றுள்ளன.

யோகா குறித்த நேரடி விளக்கம், உடல் பருமனுக்கான சிகிச்சை முறைகள், இலவச கண் மற்றும் பல் மருத்துவ முகாமும் நடைபெறுகிறது.

காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை இந்தக் கண்காட்சி நடைபெறும் என கல்லூரி பேராசிரியர்கள் தெரிவித்தனர்.

**மேட்டூர் அணையில் இருந்து கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு**

மேட்டூர் அணையில் இருந்து கிழக்கு, மேற்கு கால்வாய்ப் பாசனத்துக்கு வியாழக்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையின் கிழக்கு, மேற்கு கால்வாய்ப் பாசனப் பகுதிகளில் மழை பெய்து வந்ததால்,அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடுவது சனிக்கிழமை நிறுத்தப்பட்டது.

தற்போது, கால்வாய்ப் பாசனப் பகுதியில் மழையில்லாததால், வியாழக்கிழமை முதல் மீண்டும் கால்வாய்ப் பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை காலை கால்வாய்ப் பாசனத்துக்கு நொடிக்கு 400 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

மேலும் மேட்டூர் அணைக்கு நொடிக்கு 9,849 கன அடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. அணையின் நீர்இருப்பு 45.01 டி.எம்.சி.யாகவும், நீர்மட்டம் 83 அடியாகவும் உள்ளது.

**கோமாரி நோய் தடுப்பு மருத்துவ முகாம்**

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு அருகே செல்லியம்பட்டியில் வியாழக்கிழமை கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது.

தருமபுரி மாவட்டத்தில், கடந்த சில மாதங்களாக கால்நடைகளுக்கு கோமாரி நோய் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. இந்த நோயினால் நூற்றுக்கணக்கான கால்நடைகள் உயிரிழந்தன.

மாவட்டத்தில் கால்நடைகளின் உயிரிழப்பை கட்டுப்படுத்த கால்நடைத்துறையினர் சார்பில் 5 மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு நோய் தடுப்பு மருத்துவ முகாம்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதில், வியாழக்கிழமை பாலக்கோடு மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியங்களைச் சேர்ந்த செல்லியம்பட்டி, சங்கம்பட்டி மற்றும் ஆலாபுரம் ஆகிய ஊராட்சிகளில் கால்நடை மருத்துவ முகாம்கள் நடைபெற்றன.

இதில், செல்லியம்பட்டியில் நடைபெற்ற முகாமை மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் நேரில் ஆய்வு செய்து பேசியது:

தருமபுரி மாவட்டத்திலுள்ள 4 வயதுக்கு மேற்பட்ட கால்நடைகளுக்கு நோய் தடுப்பூசி போட வேண்டும். நோய் தாக்குதல் குறித்து அருகிலுள்ள கால்நடை மருத்துவர்களுக்கும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள 1077 என்ற எண்ணுக்கு தகவல் தெரிவித்து நோய் பாதிப்பிலிருந்து கால்நடைகளை காத்துக் கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர். இதில், கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர்கள் எஸ்.இளங்கோவன், அர்த்தனாரி மற்றும் மருத்துவக் குழுவினர் உடனிருந்தனர்.

**இலை கருகல் நோயை கட்டுப்படுத்த யோசனை**

புதுக்கோட்டை மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெற்பயிரைத் தாக்கும் பாக்டீரியா இலை கருகல் நோயைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து வேளாண் துறை யோசனை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து புதுக்கோட்டை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது நிலவும் மேகமூட்டமான வானிலை மற்றும் இரவில் அதிக ஈரப்பதம் போன்றவை காரணமாக சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெற்பயிரில் பாக்டீரியா இலை கருகல் நோய் தாக்குதல் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. இந்நோயை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தினால் மகசூல் இழப்பைத் தவிர்க்காலம்.

நோய் அறிகுறிகள்: நோய் தாக்கிய நெற்பயிரில் வாடல் மற்றும் இலை கருகல் காணப்படும். இது பெரும்பாலும் நட்ட 3-4 வாரங்களில், அதாவது தூர் பிடிக்கும் பருவத்தில் தோன்றும்.

இலை கருகல் நோயின் ஆரம்ப நிலையில் மஞ்சள் அல்லது வெளிறிய மஞ்சள் நிறத்தில் நீர்கசிவுள்ள புள்ளிகள் இலையின் நுனியில் தோன்றி கீழ்நோக்கி விளிம்புகளில் பரவும்.

இதனால், இலை நுனி மற்றும் விளிம்புகள் மஞ்சள் நிறமாக மாறி காய்ந்துவிடும்.

சோதனை செய்யும் முறை: பாதிக்கப்பட்ட இலைகளை வெட்டி, சோதனைக் குழாயிலுள்ள தெளிவான நீரில் போட்டுப் பார்த்தால், இலையின் சாற்றுக் குழாயிலிருந்து வெள்ளை நிறத் திரவமாக பாக்டீரியா வெளியேறுவது தெரியும்.

நோய் பரவும் முறை: பாசன நீர், மழை மற்றும் காற்று மூலம் இது பரவுகிறது. வானிலை மேகமூட்டத்துடன் இருக்கும் போதும், தழைச்சத்தை அதிகமாகப் பயன்படுத்தும் போதும் இந்நோய் அதிக அளவில் பரவுகிறது.

நோயைக் கட்டுப்படுத்தும் முறை: பரிந்துரை செய்யப்பட்ட தழைச்சத்தை யூரியா மூலம் மூன்று அல்லது நான்கு முறையாகப் பிரித்து இட வேண்டும். தண்ணீரை வடிகட்டி பின்பு நீர் பாய்ச்ச வேண்டும்.

நோயால் பாதிக்கப்பட்ட வயலிலிருந்து தண்ணீர் பாய்ச்சுவதைத் தவிர்க்க வேண்டும்.

பசுஞ்சாணக் கரைசல் தெளித்தல்: ஓர் ஏக்கருக்கு 40 கிலோ பசுஞ்சாணத்தை 10 லிட்டர் நீரில் கரைத்து ஓர் இரவு மட்டும் வைத்திருந்து மறுநாள் கரைசலை வடிகட்டி தெளிந்த பசுஞ்சாணக் கரைசலை தேவையான அளவு தண்ணீர் கலந்து 200 லிட்டர் கரைசல் தயாரித்து கைத்தெளிப்பானால் மாலை நேரத்தில் பயிர் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும்.

இதேபோல, 10 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்க வேண்டும். பசுஞ்சாணக் கரைசல் தெளிக்கும் முன்பு வயலில் தண்ணீரை வடித்துவிட வேண்டும்.

பூஞ்சானக்கொல்லி தெளித்தல்: இந்நோயின் தாக்குதல் தீவிரமாகும் போது ஏக்கருக்கு ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட் மற்றும் டெட்ராசைக்ளின் கலவையை 120 கிராம் மற்றும் காப்பர் ஆக்சிகுளோரைடு 500 கிராம் ஆகியவற்றைக் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

இதை கடைப்பிடித்து விவசாயிகள் தங்களது நெற்பயிரை காத்து மகசூல் இழப்பை தடுக்க முடியும்.

**கோமாரி நோய் தாக்கி 2 மாடுகள் சாவு**

தா. பழூர் அருகே கோமாரி நோய்த் தாக்கி இரண்டு மாடுகள் இறந்தன.

அரியலூர் மாவட்டம், தா. பழூர் அருகே உள்ள சாத்தம்பாடி கிராமத்தைச் சேர்ந்தவர் மல்லிகா இவருக்குச் சொந்தமான கன்றுக்குட்டி ஒன்று கடந்த 2 நாள்களுக்கு முன்பு இறந்து விட்டது. இந்நிலையில், புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் இரவு இவருக்குச் சொந்தமான இரண்டு மாடுகள் இறந்தன. இதுகுறித்த தகவலறிந்த சீறி. புரந்தான் கால்நடை மருத்துவர் மணிமொழி இறந்து போன மாடுகளைப் பரிசோதித்து கோமாரி நோயினால்தான் மாடுகள் இறந்தது என்பதை உறுதி செய்தார். மேலும் திருச்சி கால்நடை நோய்கள் தடுப்புப் பிரிவு சிறப்பு மருத்துவர் பன்னீர்செல்வமும், சாத்தம்பாடி கிராமத்துக்கு சென்று ஆய்வு செய்தார். இதைத் தொடர்ந்து தா. பழுர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கால்நடை மருத்துவர்கள் 8 பேர் கொண்ட குழுவினர் கோமாரி நோய்த் தடுப்பு மருந்துகளை விவசாயிகளிடம் வழங்கினார்கள். மேலும் மல்லிகா வீட்டில் உள்ள மேலும் 2 மாடுகளுக்கு கோமாரி நோய் பாதிப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்நோயை கட்டுப்படுத்த அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வும், பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு தமிழக அரசு இழப்பீடு தொகை வழங்க வேண்டும் என்றும் அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**பிசான பருவத்தில் 65 ஆயிரம் ஹெக்டேர் சாகுபடி இலக்கு**

தாமிரவருணி பாசனத்தில் பிசான பருவப் பணிகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. திருநெல்வேலி மாவட்டத்தில் 65,000 ஹெக்டேரில் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 6,865 ஹெக்டேரில் நடவுப் பணி முடிந்துள்ளதாக, வேளாண் இணை இயக்குநர் கி. சௌந்தரராஜன் தெரிவித்தார்.

தாமிரவருணி பாசனத்தில் பிசான பருவ சாகுபடி பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. திருநெல்வேலி மாவட்டத்தில் பாபநாசம் அணை மூலம் பாசனம் பெறும் அம்பாசமுத்திரம், விக்கிரமசிங்கபுரம், கல்லிடைக்குறிச்சி, வீரவநல்லூர், முக்கூடல்,

பாப்பாக்குடி, சேரன்மகாதேவி, பத்தமடை பகுதிகளில் விவசாயிகள் நடவுப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து திருநெல்வேலி வேளாண் இணை இயக்குநர் கி. சௌந்திரராஜன் வியாழக்கிழமை கூறியதாவது: இம் மாவட்டத்தில் கார் பருவத்தில் 19,000 ஹெக்டேர் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில் எதிர்பார்த்ததைவிட 21,500 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. நிகழ் பிசான பருவத்தில் 65,000 ஹெக்டேர் சாகுபடிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, தேவையான நெல் விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அம்பை 16, ஆடுதுறை 39, 43, 45 ஆகிய விதை ரகங்களும், கர்நாடக, ஆந்திர பொன்னி ரக விதைகளும் அதிகளவில் விநியோகிக்கப்பட்டுள்ளன. தென்காசி, கடையநல்லூர், செங்கோட்டை, கடையம், அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, முக்கூடல், சிவகிரி வட்டாரங்களில் முழு அளவில் விவசாயப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை 6,865 ஹெக்டேரில் நெல் நடவுப் பணி முடிந்துள்ளது.

இப் பருவத்தில் பருவமழை போதுமான அளவு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சங்கரன்கோவில், ராதாபுரம், நான்குனேரி வட்டங்களில் மழை பெய்தால்தான் பாசனப் பணிகளைத் தொடங்க முடியும் என்ற நிலை உள்ளது.

இம் மாவட்டத்தில் 2012-ம் ஆண்டைவிடக் கூடுதலாக சாகுபடி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

நீர்ப்பிடிப்புப் பகுதியில் மிதமான மழை: மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மிதமான மழை பெய்து வருகிறது. வியாழக்கிழமை காலை நிலவரப்படி பதிவான மழையளவு (மில்லி மீட்டரில்): பாபநாசம் அணை-28, பாபநாசம் கீழ் அணை-10, சேர்வலாறு அணை-19, மணிமுத்தாறு அணை - 6.2, கடனாநதி அணை- 33, ராமநதி அணை-24, அம்பாசமுத்திரம்- 56.4, கன்னடியன் அணை-37.2, கருப்பாநதி- 12, குண்டாறு அணை- 2, அடவிநயினார் அணை- 20.

நீர்மட்டம் உயர்வு: பாபநாசம் அணை நீர்மட்டம் 95.25 அடியாகவும், சேர்வலாறு அணை நீர்மட்டம் 108 அடியாகவும், மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 68.90 அடியாகவும், கடனாநதி அணை நீர்மட்டம் 1.50 அடி உயர்ந்து 61.50 அடியாகவும், ராமநதி அணை நீர்மட்டம் 2.50 அடி உயர்ந்து 62.25 அடியாகவும் இருந்தது. கருப்பாநதி அணை நீர்மட்டம் 3.28 அடி உயர்ந்து 51.51 அடியாகவும், அடவிநயினார் அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 112 அடியாகவும் இருந்தது. கடனாநதி அணைக்கு விநாடிக்கு 144 கனஅடியும், ராமநதி அணைக்கு விநாடிக்கு 95 கனஅடியும், கருப்பாநதி அணைக்கு விநாடிக்கு 128 கனஅடியும், அடவிநயினார் அணைக்கு விநாடிக்கு 98 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

**களியக்காவிளையில் பரவலாக மழை**

களியக்காவிளை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வியாழக்கிழமை மாலையில் பரவலாக மழை பெய்தது.

இப்பகுதியில் கடந்த சில நாள்களாக விட்டு, விட்டு லேசான மழை பெய்து வருகிறது. புதன்கிழமை இரவு பரவலாக மழை பெய்தது.

இந்த நிலையில் வியாழக்கிழமை பகலில் வெயில் காணப்பட்டது. வெப்பமும் அதிகளவு இருந்தது. பிற்பகலில் வானம் லேசாக மேக மூட்டமாக காணப்பட்டது. தொடர்ந்து மாலை 4 மணிக்கு மேல் பரவலாக மழை பெய்தது. அரை மணி நிரத்திற்கும் மேல் மழை பெய்தது. தொடர்ந்து சிறிது நேரம் சாரல் மழை பெய்து கொண்டிருந்தது. அதன்பின்னர் வானம் மேகமூட்டமாகவே காணப்பட்டது. களியக்காவிளை சுற்றுவட்டாரப் பகுதிகளான படந்தாலுமூடு, திருத்துவபுரம், மடிச்சல், அதங்கோடு உள்ளிட்டப் பகுதிகளிலும் பரவலாக மழை பெய்தது. மாலை வேளையில் குளிர்ச்சியான சீதோசநிலை நிலவியது.

**மீனவர்களுக்கு தொலைத் தொடர்பு கருவிகள் வழங்கக்கோரி நாகர்கோவிலில் ஆர்ப்பாட்டம்**

கடலில் தொழில் செய்யும் மீனவர்களுக்கு தொலைத் தொடர்பு கருவிகள் வழங்க அரசை வலியுறுத்தி நாகர்கோவிலில் அனைத்து மீனவர் இயக்கங்கள் கூட்டமைப்பு சார்பில் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நாகர்கோவிலில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் அனைத்து மீனவர் இயக்கங்களின் கூட்டமைப்பு மற்றும் கடலோர அமைதி மற்றும் வளர்ச்சி மையம் ஆகியன சார்பில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு நிஷா பேபிஜாண் தலைமை வகித்தார். ஜெனிஷா சூசை முன்னிலை வகித்தார்.

நெய்தல் மக்கள் இயக்கத் தலைவர் சி. பெர்லின், கடலோர அமைதி மற்றும் வளர்ச்சி மைய இயக்குநர் அ. கில்டஸ் ஆகியோர் பேசினர்.

கடலில் தொழில் செய்யும் மீனவர்களுக்கு தொலைத் தொடர்பு கருவிகள் வழங்க வேண்டும். கடல் அரிப்பில் இருந்து மீனவர்களின் பாரம்பரிய இருப்பிடங்களை பாதுகாக்கவும், துண்டிக்கப்பட்ட இணைப்புச் சாலைகளான முள்ளூர்த்துறை-தேங்காய்பட்டணம், இரவிபுத்தன்துறை-வள்ளவிளை இணைப்புச் சாலைகளை உடனே சரி செய்ய வேண்டும். மீனவர்கள் தொழில் செய்வதற்கு ஏதுவாக கட்டமைப்பு வசதிகள் போர்க்கால அடிப்படையில் செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் பேசினர்.

தொடர்ந்து அ. கில்டஸ் தலைமையில் நிர்வாகிகள் மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு அளிக்க அலுவலகத்திற்குச் சென்றனர். அங்கு ஆட்சியர் இல்லாததால் அங்கிருந்த அதிகாரியிடம் மனுவை அவர்கள் அளித்தனர்.

ஆர்ப்பாட்டம் நிறைவடையும் போது, மீனவர்கள் திடீரென சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. பின் நிர்வாகிகள் கேட்டு கொண்டதன்பேரில் மீனவர்கள் சாலை மறியலை கைவிட்டு கலைந்து சென்றனர்.

**கோமாரி நோய் பரவாமல் தடுக்க ரூ.5.50 லட்சம் மருந்துகள் இருப்பு**

கடலூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் பரவாமல் தடுக்க ரூ.5.50 லட்சம் மதிப்பீட்டில் கால்நடை பராமரிப்புத் துறைக்கு மருந்துகள் பெறப்பட்டுள்ளன.

இதுகுறித்து இணை இயக்குநர் மதிவாணன் வியாழக்கிழமை கூறியது: தமிழகம் முழுவதும் கோமாரி நோய் தாக்குதல் காணப்படுகிறது.

மாவட்டத்தில் 1.35 லட்சம் மாடுகள் உள்ளன. இவற்றில் 857 மாடுகளுக்கு கோமாரி நோய் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது 587 மாடுகளுக்கு நோய் குணப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 300 மாடுகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

நோய் பரவாமல் தடுக்க சோடியம் கார்பனேட் 2 டன், சோடியம் ஹைட்ராக்சைடு 2 டன் மற்றம் பிளீச்சிங் பவுடர் 2 என மொத்தம் ரூ.5.50 லட்சம் செலவில் 6 டன் மருந்துகள் பெறப்பட்டு அனைத்து ஊராட்சிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் முக்கிய மருந்தான செப்படாக்ஸ் எனப்படும் மருந்தும் பெறப்பட்டுள்ளது.

கால்நடை மருத்துவமனைக்கு நோய் பாதித்த கால்நடைகள் வந்தால், மற்ற கால்நடைகளுக்குப் பரவாமல் தடுக்க அனைத்து மருத்துவமனைகளிலும் நுழைவு வாயிலில், பள்ளம் தோண்டி அரை அடிக்கு தண்ணீர் விட்டு அதில் மருத்துகளை கலந்து வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் உள்ளே வரும் கால்நடைகள் அவற்றை கால் வைத்து சுத்தம் செய்யப்பட்டு உள்ளே செல்லும். இதன் மூலம் நோய் பரவுவது கட்டுப்படுத்தப்படும் என்றார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**22.11.2013**

## வெங்காயத்தை தொடர்ந்து பூண்டு விலையும் கிடுகிடு



மும்பை: வெங்காயத்தை தொடர்ந்து, பூண்டு விலையும், கிடு கிடுவென உயர்ந்து வருகிறது.விவசாயிகள் விற்பனைக்கு பூண்டு அனுப்புவதை குறைத்துள்ளதும், வர்த்தகர்கள் கூட்டணி அமைத்து பதுக்குவதாலும், கடந்த ஒரு மாதத்தில் பூண்டின் விலை, இரு மடங்கு உயர்ந்துள்ளது.

**உற்பத்தி:** நாட்டின் பூண்டு உற்பத்தி, ஆண்டுக்காண்டு வளர்ச்சி கண்டு வருகிறது.கடந்த 2010–11ம் நிதியாண்டு, 10.57 லட்சம் டன் பூண்டு உற்பத்தியானது. இது, 2011–12ம் நிதியாண்டில், 12.25 லட்சம் டன்னாகவும், 2012–13ம் நிதியாண்டில், 12.50 லட்சம் டன்னாகவும் அதிகரித்துள்ளது.சென்ற நிதியாண்டில், பூண்டு உற்பத்தியில் புதிய சாதனை படைக்கப்பட்ட போதிலும், கடந்த ஒரு மாதத்தில், அதன் விலை, இரு மடங்கு அதிகரித்துள்ளது.

சந்தையில், புதிய பூண்டு வரத்து, 3 வாரங்களுக்கு மேலாக குறைந்துள்ளதால், அதன் விலை உயர்ந்துள்ளதாக கூறப்படுகிறது.ஆனால், பூண்டு விலை மேலும்

உயரும் என்ற எதிர்பார்ப்பில், விவசாயிகள், கையிருப்பு வைத்துள்ளதாலும், வர்த்தகர்கள் கூட்டாக செயல்பட்டு, சந்தையில் பூண்டு வரத்தை செயற்கையாக குறைத்துள்ளதாலும் தான் அதன் விலை உயர்ந்துள்ளது என, கூறப்படுகிறது. உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு, பூண்டு உற்பத்தி உள்ளது. இருந்த போதிலும் தற்போது, அதிகபட்சமாக, ஒரு கிலோ பூண்டு, 100 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.சென்னை

கடந்த 18–19ம் தேதிகளில், சென்னை, மொத்த விற்பனை சந்தையில் ஒரு கிலோ பூண்டு, 50 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இது, தற்போது, 75–80 ரூபாய் வரை விற்கப் படுகிறது.இதே காலத்தில், டில்லியில், மொத்த விற்பனை சந்தையில், ஒரு கிலோ பூண்டின் விலை, 24 ரூபாயில் இருந்து,அதிகபட்சமாக, 100 ரூபாயாக உயர்ந்துள்ளது. அது போன்று, இதே காலத்தில்,மும்பையில் ஒரு கிலோ பூண்டின் விலை, 50 ரூபாயில் இருந்து, 85 ரூபாயாகவும், புனேயில், 45லிருந்து, 90 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.

இதுகுறித்து, மும்பையை சேர்ந்த சில்லரை விற்பனையாளர்ஒருவர் கூறியதாவது: மூன்று வாரங்களாக பூண்டு வரத்து குறைந்துள்ளதால் அதன் விலை உயர்ந்துள்ளது என்பதை ஏற்க முடியாது. ஏனெனில், சென்ற நிதிஆண்டில், பூண்டு உற்பத்தி, சாதனை அளவாக உயர்ந்து காணப்பட்டது.

அதனால், பூண்டு விலை உயர்வில், கையிருப்பை வெளியிட மறுக்கும் விவசாயிகள் மற்றும் வர்த்தகர்களின் கூட்டணிக்கு, முக்கிய பங்கு உள்ளது.கடந்த சில நாட்களில், மொத்த விற்பனையில், கிலோவுக்கு, 20 ரூபாய் வரை குறைந்துள்ளது. ஆனால், இந்த விலை நிலைத்திருக்க வாய்ப்பில்லை. வரும் ஜனவரியில் தான், புதிய பூண்டு அறுவடையாகும்.

**பருவ மழை**:அதுவரை பூண்டு விலை, ஏற்றமுடன் இருக்கும். அதே சமயம், நாட்டின் பல பகுதிகளில் பெய்து வரும் பருவ மழையால், பூண்டு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.இதன் காரணமாக, வரும் ஆண்டு, பிப்ரவரியில் தான், சந்தையில் புதிய பூண்டின் வரத்து நிலையாக இருக்கும். அப்போது தான் அதன் விலையும் சரிவடையும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**உற்பத்தியில் முதலிடம்**:நாட்டின் ஒட்டுமொத்த பூண்டு உற்பத்தியில்,

மத்தியபிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் பங்களிப்பு, 50–60 சதவீதமாக உள்ளது

## வேளாண் பொருட்கள் ஏற்றுமதி ரூ.66,387 கோடியாக வளர்ச்சி



புதுடில்லி,: நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான ஆறு மாத காலத்தில், நாட்டின் வேளாண் பொருட்கள் ஏற்றுமதி, 66,387 கோடி ரூபாயாக வளர்ச்சி கண்டுள்ளது.இது, கடந்த நிதியாண்டின் இதே காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட, 17 சதவீதம் அதிகம் என, வேளாண் செலவினங்கள் மற்றும் விலைகள் ஆணையம் தெரிவித்துள்ளன.

**பாசுமதி அரிசி**: கடந்த ஒரு சில ஆண்டுகளாக, நாட்டின் வேளாண் பொருட்கள் ஏற்றுமதி, சிறப்பான அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது. இதற்கு பாசுமதி, சாதாரண அரிசி, இறைச்சி, கோதுமை, பழங்கள், காய்கறிகள் மற்றும் பதப்படுத்தப் பட்ட உணவு வகைகள் ஏற்றுமதி அதிகரித்து வருவதுதான் காரணம்.

கடந்த 2012–13ம் நிதியாண்டில், நாட்டின் வேளாண் பொருட்கள் ஏற்றுமதி, 1.20 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது. இது, இதற்கு முந்தைய 2011–12ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை (86,028 கோடி ரூபாய்) விட, 40 சதவீதம் அதிகமாகும்.

கடந்த 2010–11ம் நிதியாண்டில், வேளாண் பொருட்கள் ஏற்றுமதி, 43,731 கோடி ரூபாயாக இருந்தது. அவ்வாண்டில், இதன் ஏற்றுமதி, 15.5 சதவீதம் வளர்ச்சி கண்டுஇருந்தது.சென்ற நிதியாண்டில், நாட்டின் மொத்த ஏற்றுமதியில், வேளாண்

பொருட்களின் பங்களிப்பு, 10.66 சதவீதமாக இருந்தது. இது, நடப்பு நிதிஆண்டின் முதல் ஆறு மாத காலத்தில் மட்டும், 10.35 சதவீதம் என்ற அளவில் உயர்ந்துள்ளது.கடந்த நிதியாண்டில், கொத்தவரை விதை ஏற்றுமதி, மிகவும் சிறப்பாக இருந்தது.

அமெரிக்கா உள்ளிட்ட பல வளர்ச்சியடைந்த நாடுகளில், பாறை எரிவாயு துரப்பணப் பணிகளில், கொத்தவரை விதையிலிருந்து எடுக்கப்படும் பசை, அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வந்தது. இதனால், கடந்த நிதிஆண்டில், இதன் ஏற்றுமதி மிகவும் அதிகரித்து காணப்பட்டது.நடப்பு வேளாண் பருவத்தில், உள்நாட்டில் பல மாநிலங்களில் பருவ மழை பொழிவு நன்கு உள்ளதுடன், தட்பவெப்ப நிலையும் சாதகமாக உள்ளது.

**கோதுமை:**இதனால், உணவு தானியங்கள் உற்பத்தி, குறிப்பாக, நெல், கோதுமை, பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகிய வற்றின் உற்பத்தி சிறப்பாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், மத்திய அரசு, அரிசி, கோதுமை ஆகியவற்றின் ஏற்றுமதி மீதான தடையை முற்றிலும் விலக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.இருப்பினும், 'அபெடா' அமைப்பு, நடப்பு நிதியாண்டில் வேளாண் பொருட்கள் ஏற்றுமதி, கடந்த நிதியாண்டை விட, சற்றே அதிகரிக்கும் என, மதிப்பிட்டுள்ளது. இதற்கு, கொத்தவரை விதை ஏற்றுமதி குறைந்துள்ளது தான் முக்கிய காரணம்.

**இறைச்சி:**தற்போதைய நிலவரப்படி, இதன் ஏற்றுமதி, 52 சதவீதம் சரிவடைந்து, 7,218 கோடி ரூபாயாக குறைந்துள்ளது.நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாத காலத்தில், பாசுமதி அரிசி ஏற்றுமதி வாயிலான வருவாய், 14,118 கோடி ரூபாயாகவும், சாதாரண வகை அரிசி ஏற்றுமதி வாயிலான வருவாய், 8,810 கோடி ரூபாயாகவும் உள்ளது.

இவை தவிர, இறைச்சி (11,887 கோடி). கோதுமை (5,681 கோடி), பழங்கள் (1,784 கோடி ரூபாய்) மற்றும் காய்கறிகள் (1,970 கோடி ரூபாய்) போன்றவற்றின் ஏற்றுமதி வருவாயும் குறிப்பிடத்தக்க அளவிற்கு உள்ளது.நடப்பாண்டில், அரிசி ஏற்றுமதி, கடந்த 2011 மற்றும் 2012ம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கோடி டன் என்ற அளவிற்கே இருக்கும் என, திர்பார்க்கப்படுகிறது.கடந்த இரண்டு

ஆண்டுகளாக, நாட்டின் அரிசி ஏற்றுமதி அதிகரித்ததையடுத்து, சர்வதேச சந்தையில், அரிசி ஏற்றுமதியில் முன்னிலையில் இருந்த, தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளை, இந்தியா பின்னுக்கு தள்ளியுள்ளது.இச்சூழ்நிலையில், இந்திய வேளாண் பொருட்கள், சர்வதேச தர நிர்ணயித்திற்கு ஏற்ப உள்ளதால், இந்திய வேளாண் பொருட்களுக்கு, உலகின் பல்வேறு நாடுகளில் தேவைப்பாடு அதிகரித்துள்ளது.

**பால் பொருட்கள்:** மேலும், மதிப்பு கூட்டப்பட்ட வேளாண் பொருட்களாலும், இதன் ஏற்றுமதி உயர்ந்து வருகிறது என, மத்திய வர்த்தக அமைச்சகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.மேற்கண்ட வேளாண் பொருட்கள் தவிர, நடப்பு நிதிஆண்டின் முதல் ஆறு மாத காலத்தில், பால் பொருட்கள் ஏற்றுமதி, 1,634 கோடி ரூபாயாகவும், பருப்பு வகைகள் ஏற்றுமதி, 1,018 கோடி ரூபாயாகவும் வளர்ச்சி கண்டுள்ளதாக, வேளாண் செலவினங்கள் மற்றும் விலைகள் ஆணையத்தின் தலைவர் அசோக் குலாத்தி தெரிவித்துள்ளார்.

நெல்லுக்கு கூடுதல் விலைதரும் வியாபாரிகள்: கலெக்டர் நடவடிக்கையால் அடித்தது "லக்'மதுரை : மதுரை மாவட்டத்தில் குறுவை சாகுபடி நெல்லை வியாபாரிகள் கூடுதல் விலைக்கு கொள்முதல் செய்வதால், விவசாயிகள் அரசு கொள்முதல் நிலையம் செல்வதை தவிர்த்துவிட்டனர்.

மாவட்டத்தில் குறுவை சாகுபடியில் 10, 687 எக்டேர் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது வரை 7 ஆயிரம் எக்டேர் நிலத்தில் அறுவடை பணிகள் முடிந்துள்ளன. இம்மாத இறுதிக்குள் அனைத்து பகுதிகளிலும் அறுவடை முடிந்துவிடும். குறுவை சாகுபடிக்கு இந்த ஆண்டு முதன்முறையாக, அரசு நெல்கொள்முதல் மையங்களை திறந்துள்ளது. வியாபாரிகள் விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு கொள்முதல் செய்வதை தடுக்கவே இந்த ஏற்பாடு செய்யப் பட்டது. இம்மையங்களில் ஈரப்பதம் 17 சதவீதத்திற்கு கீழ் உள்ள ஒரு குவிண்டால் சன்னரக நெல் ரூ.1410, பெருவெட்டு நெல் ரூ.1360 என விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நவ.,9ம் தேதி குலமங்கலத்தில் முதல் கொள்முதல் மையம் துவக்கப்பட்டது. இன்று நாச்சிக்குளம், ஆண்டிப்பட்டி, அலங்காநல்லூர், புதுத்தாமரைப்பட்டி, கள்ளந்திரியில் மையங்கள் திறக்கப்படுகின்றன. இதுதவிர மேலும் 24 மையங்களுக்கும் கலெக்டர் சுப்ரமணியன் ஏற்பாடு செய்துள்ளார்.
குலமங்கலத்தில் துவக்க நாளில் விவசாயி கிருஷ்ணன் மட்டுமே, இம்மையத்தில் ஒரு டன் நெல்லை விற்றுள்ளார். வேறு யாரும் வரவில்லை. காரணம், வியாபாரிகளே அரசு விலையைவிட கூடுதல் விலைக்கு நெல்லை கொள்முதல் செய்வதுதான். கடந்த காலங்களில் அரசு நிர்ணயத் தொகையைவிட குவிண்டாலுக்கு ரூ.500 வரை குறைத்தே வாங்கும் விவசாயிகள், இந்த ஆண்டு அரசு விலைக்கு வாங்கி வருகின்றனர். 67 கிலோ மூடைக்கு விவசாயிகளுக்கு ரூ.950 தருகின்றனர். இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
விவசாயி கிருஷ்ணன் கூறுகையில்,
""தூசி, ஈரப்பதம் எப்படி இருந்தாலும் வியாபாரிகள் வாங்குகின்றனர். இதனால் போக்குவரத்துச் செலவும் கிடையாது. இதனால் விவசாயிகள் வியாபாரிகளிடமே விற்றுவிடுகின்றனர். வரும் மாதங்களில் சம்பா சாகுபடி பொய்த்துவிடும் நிலை உள்ளதால், வாங்கி "ஸ்டாக்' வைக்க வியாபாரிகளும் கூடுதல் விலையானாலும் பரவாயில்லை எனக்கூறி கொள்முதல் செய்கின்றனர்'' என்றார்.

**நெல்லையில் தொடர் மழை : குற்றால அருவிகளில் வெள்ளம்**

திருநெல்வேலி: நெல்லை மாவட்ட மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்த மழையால், குற்றாலம் மெயின்அருவியில், நேற்று வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில், நேற்று முன்தினம் இரவில் பரவலாக மழை பெய்தது. மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில், குறிப்பாக, அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில், மழை பெய்ததால், அவற்றின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. 143 அடி உயரம் கொண்ட பாபநாசம் அணையின் நீர்மட்டம், 95 அடியாக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு, இதே நாளில், 73 அடி தண்ணீர் இருந்தது. 118 அடி உயரமுள்ள

மணிமுத்தாறு அணை நீர்மட்டம், 68 அடியாக உள்ளது. கடந்த ஆண்டு, இதே நாளில், 63 அடி தண்ணீர் இருந்தது. குற்றாலம் அருவிகளில், நேற்று காலையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. தண்ணீர் செம்மண் நிறமாக விழுந்ததால், சுற்றுலா பயணிகள் குளிக்க சிறிதுநேரம் தடை விதிக்கப்பட்டது. இருப்பினும், ஓரமாக குளித்தனர். விலங்குகளை விரட்டும் வைரஸ் கிருமி : வேளாண் பல்கலையில் ஆராய்ச்சிதுரை: ""விலங்குகளை விரட்டும் வைரஸ் கிருமி(அனிமல் ரிபெல்லன்ட்) குறித்து, கோவை வேளாண் பல்கலையில் ஆய்வு செய்யப்படுகிறது," என, வேளாண் வணிக மேம்பாட்டு இயக்குனர் முருகேசன் தெரிவித்தார்.

மதுரை விவசாயக் கல்லூரியில், வணிக மேம்பாட்டு மைய துவக்க விழாவில் தொழில் முனைவோருக்கான வாய்ப்புகள் குறித்து அவர் பேசியதாவது: இந்திய வேளாண் ஆராய்ச்சி மையம் சார்பில், "அக்ரி இன்னோவேட்' நிறுவனம், சமீபத்தில் துவக்கப்பட்டது. வேளாண் மற்றும் அதுசார்ந்த பொருட்களை சந்தைப்படுத்துதல், கண்டுபிடிப்புகளை வெளியுலகிற்கு அறிமுகப்படுத்துதல், ஏற்றுமதி வாய்ப்புகளை கண்டறிதல் குறித்த வழிகாட்டுதலை இங்கு பெறலாம். கோவை வேளாண் பல்கலையில் 2007லிலேயே, இந்தியாவில் முதன்முறையாக வணிக வேளாண் மேம்பாட்டு இயக்ககம் துவக்கப்பட்டு, வெற்றிகரமாக செயல்படுகிறது. இதுவரை கண்டுபிடிப்புகள் மற்றும் சந்தைபடுத்துதலுக்காக 84 பேர், பதிவு செய்துள்ளனர். வாழை நார், தென்னை நார் தொழில்நுட்பங்களை கற்றுத் தந்துள்ளோம். மனிதர்கள், விலங்குகள் முரண்பாடுகள் இந்தியாவில் அதிகம். பயிர்களை யானை, மான், காட்டெருமை கூட்டங்கள் சேதப்படுத்துவதால் இழப்பு ஏற்படுகிறது. இதற்காக பல்கலை மூலம், விலங்குகளை விரட்டும் வைரஸ் கிருமியை கண்டுபிடித்துள்ளோம். நெல், சோளம், கரும்பு உட்பட அனைத்து பயிர்களிலும் பயன்படுத்தலாம். 10 நாட்களுக்கு ஒருமுறை, விலங்குகள் வரும் வழிதடத்தை ஒட்டிய பயிர்களில் இந்த வைரஸை தெளித்தால், இதன் வாசனைக்கு விலங்குகள் ஓடிவிடும், என்றார். உதவி பேராசிரியர் பாக்கியத்து சாலிகா வரவேற்றார். முதல்வர் சின்னுசாமி தலைமை வகித்தார். மண் மற்றும் சுற்றுச்சூழல் துறைத் தலைவர் பாஸ்கர் நன்றி கூறினார்.

"சிட்டி' ஆவதால் அழியும் சிட்டுக்குருவி இனம்: வாழ்விடம் தரும் செயற்கை கூடுகள்கோவை: அழிந்து வரும் சிட்டுக்குருவிகளைப் பாதுகாக்கவும், நகரப் பகுதிகளுக்குள் அவற்றை வளர்க்கவும் வனத்துறை மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகள் மேற்கொள்ளும் முயற்சிக்கு நல்ல பலன் கிடைத்துள்ளது.உலக அளவில் வேகமாக அழிந்து வரும் பறவைகளின் பட்டியலில், சிட்டுக்குருவியும் இடம் பெற்றுள்ளது. காகங்களுக்கு அடுத்ததாக, நமக்கு அதிகம் பரிச்சயமான பறவையினமான சிட்டுக்குருவியின் எண்ணிக்கை, நகரமயமாதலால் வேகமாகக் குறைந்து வருகிறது. கிராமப்புற ஓட்டு வீடுகளிலும், வயல், கண்மாய், குளம், ஏரி கரையோர மரங்களிலும் சிட்டுக்குருவிகள் கூடு கட்டுவது வழக்கம். ஆனால், இப்போது கிராமங்களில் கூட, மரங்களும், ஓட்டு வீடுகளும் அரிதாகிப் போய் விட்ட நிலையில், குருவிகளுக்கான வாழ்விடம் அருகி வருகிறது. சிறு தானியங்கள், தாவரங்களில் உள்ள புழு, பூச்சிகள்தான், சிட்டுக்குருவிகளின் விருப்ப உணவு. ஆனால், தானியங்களின் பயன்பாடு குறைந்திருப்பதோடு, பூச்சி மருந்துகள் பயன்படுத்தப்படுவதால் புழு, பூச்சிகளும் அவற்றுக்கு உணவாகக் கிடைப்பதில்லை. சாதாரணமாக, 12லிருந்து 13 ஆண்டுகள் வரை உயிர் வாழும் சிட்டுக்குருவிகள், உணவுப் பற்றாக்குறை, வாழ்விடம் அழிப்பு, பூச்சி மருந்துகள் கலந்த உணவை உட்கொள்வது போன்ற பல காரணங்களால் குறைந்த ஆயுட்காலத்திலேயே மடிந்து போகின்றன. முன்பெல்லாம், சாப்பாடு பாத்திரங்களைக் கழுவும்போது, அந்த தண்ணீர், பின் புறமுள்ள தோட்டங்களுக்கு பாய்ச்சப்படும். அவற்றிலுள்ள உணவு எச்சங்களை சிட்டுக்கள் உணவாகக் கொள்ளும். ஆனால், இப்போது எல்லா வீடுகளிலும் "சிங்க்' எனப்படும் தொட்டிகளில், பாத்திரங்கள் கழுவப்பட்டு, குழாய்களின் வழியாக நேரடியாக சாக்கடைகளுக்கு தண்ணீர் போகும் வகையில் கட்டமைப்புகள் உள்ளன. அதுமட்டுமின்றி, பாத்திரம் கழுவுவதற்கு ரசாயனம் கலந்த பொருட்களைப் பயன்படுத்துவதால், உணவுப் பொருட்களை சிட்டுக்கள் உண்ணும்போது பாதிப்புக்குள்ளாகின்றன. இதுபோதாதென்று, நகரம் முழுவதும் அதிகரித்து வரும் "செல்போன் டவர்'களில் வெளியாகும் மின் காந்த அலைகள், குருவிகளை பாதிப்பதாக கூறப்படுகிறது.

இதற்கு அறிவியல்பூர்வ ஆதாரம் ஏதுமில்லை என்றும் சிலர் கூறுகின்றனர். வேகமாக அழிந்து வரும் சிட்டுக்களைக் காப்பாற்ற, ஆண்டுதோறும் மார்ச் 20ல் உலக சிட்டுக்குருவிகள் தினம் கொண்டாடப்படுகிறது. கோவையில், சிட்டுக்குருவிகளுக்கு வாழ்விடம் தரும் வகையில், "ஓசை' உள்ளிட்ட சில சுற்றுச்சூழல் அமைப்புகள் சார்பில் செயற்கையான கூடுகளை உருவாக்கி, இலவசமாக வீடுகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இந்த முயற்சிக்கு நல்ல பலனும் கிடைத்துள்ளது. கோவையிலுள்ள பல்வேறு அடுக்கு மாடிக் குடியிருப்புகளில் உள்ள வீடுகளிலும், தனி வீடுகளிலும் செயற்கையான இந்த கூடுகளை வைத்து, அவற்றில் தானியம், தண்ணீர் ஆகியவற்றை வைத்துப் பழக்கியதன் விளைவாக, ஏராளமான வீடுகளுக்கு சிட்டுக்குருவிகள் தினசரி "விசிட்' அடிக்கத் துவங்கியுள்ளன.மாநில வன உயிரின வாரியத்தின் உறுப்பினர் காளிதாசன் கூறுகையில், ""மனிதர்களை நம்பியுள்ள பறவை சிட்டுக்குருவி. நாம் மனது வைத்தால் மட்டுமே, அதை வாழ்விக்க முடியும். நாம் நம் தேவைக்கேற்ப, வாழ்விடத்தை மாற்றிக்கொள்கிறோம்; பறவைகளால் அப்படி மாற்றிக்கொள்ள இயலாது. வீடுகள் தோறும், சிட்டுக்களுக்கு பாதுகாப்பான கூடுகளை அமைத்து, குருணையும், தண்ணீரும் வைத்தால் எவ்வளவு பெரிய நகரமாக இருந்தாலும் சிட்டுக்கள் தேடி வரும். இது கோவையில் சாத்தியமாகியிருப்பதைப்போல, எல்லா நகரங்களிலுமே சாத்தியமாகும்," என்றார்.கோவை டி.எப்.ஓ., செந்தில்குமார் கூறுகையில், ""சிட்டுக்குருவிகளை வீடுகளில் வளர்க்கக் கூடாது; பிடிக்கவும் கூடாது. பல்லுயிர்ப் பெருக்கச் சட்டப்படி, குருவி உட்பட எந்த பறவையையும், தாவரத்தையும் மாநில வன உயிரின வாரியத்தின் அனுமதியின்றி, வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்வது குற்றமாகும். வன உயிரின பாதுகாப்பு சட்டப்படி, பட்டியல் ஒன்றில் இடம் பெற்றுள்ள பறவையை கடத்திச்சென்றால், 7 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை வழங்குவதற்கு வாய்ப்புள்ளது. கோவை வனக்கோட்டத்தில், குருவிகள், கிளிகள், லவ் பேர்ட்ஸ் போன்ற பறவைகளைப் பிடித்து, விற்பனை செய்வதாக வந்த புகார்களின் பேரில், சுற்றுச்சூழல் தன்னார்வ அமைப்புகளுடன் இணைந்து, இதுதொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வனத்துறை எடுத்த முயற்சி, நல்ல பலன் கொடுத்துள்ளது," என்றார்.

நீலகிரிக்கு இறைச்சி மாடுகளை கொண்டு வர தடை! : கோமாரி நோய் பரவாமல் தடுக்க கலெக்டர் நடவடிக்கைஊட்டி: கோமாரி நோய் பரவுவதை தவிர்க்க, நீலகிரியில், மூன்று மாநில எல்லைகள் உஷார் படுத்தப்பட்டுள்ளன; கோமாரி நோய் பரவியுள்ள பகுதிகளில் இருந்து, மாவட்டத்துக்கு, இறைச்சிக்காக மாடுகளை கொண்டு வரத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வனப்பகுதிகள் நிறைந்த நீலகிரி மாவட்டத்தில், கோமாரி நோய் பரவும் வாய்ப்பு இருப்பதால், மாவட்ட நிர்வாகம், வனத்துறை மற்றும் கால்நடை பராமரிப்பு துறை சார்பில், உஷார் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. கேரளா, கர்நாடகா, தமிழக எல்லைகளை கொண்டுள்ள நீலகிரி மாவட்டத்தில், குன்னூர், கோத்தகிரி, கூடலூர், பந்தலூர் பகுதிகளில் உள்ள, "செக் போஸ்ட்'களில், பிளீச்சிங் பவுடர், வாஷிங் சோடா போடப்பட்டு வருகின்றன. பிற மாவட்டம், வெளி மாநிலங்களில் இருந்து நீலகிரிக்குள் நுழையும் வாகன டயர்கள் மூலம், இந்த தொற்று நோய்க் கிருமிகள் பரவி விடக் கூடாது என்பதற்காக, இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்ட கலெக்டர் சங்கர் கூறுகையில், ""ஈரோடு உட்பட, கோமாரி நோய் தாக்குதல் உள்ள மாவட்டங்களில் இருந்து நீலகிரிக்கு, இறைச்சி மாடுகளை கொண்டு வர அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இவற்றை கண்காணிக்க, மாவட்ட நுழைவு வாயில்கள் பணிபுரியும் ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. செப்., மாதம், நீலகிரியில், 42 ஆயிரம் மாடு மற்றும் எருமைகளுக்கு, கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது," என்றார்.

**வறட்சியை சமாளிக்க 2500 ஏக்கரில் பி.பி.எப்.எம்., நுண்ணுயிரி**

காரைக்குடி : மழையின்றி வறட்சி நிலவி வருவதால், பயிர்களை பாதுகாக்க சிவகங்கை மாவட்டத்தில், முதற் கட்டமாக 2500 ஏக்கரில், பி.பி.எப்.எம்., நுண்ணுயிரி தெளிக்கப்பட உள்ளது.

இந்த ஆண்டு, சம்பா சாகுபடிக்கு போதுமான மழை இருக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. ஆனால், மற்ற மாவட்டங்களை விட, ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் கடும் வறட்சி காணப்படுகிறது. சிவகங்கை மாவட்டத்தில், கடந்த ஆண்டு அக்டோபரில் 140 மி.மீ., மழை பெய்தது.

இந்த ஆண்டு 70 மி.மீ., மழையே பெய்துள்ளது. கடந்த ஆண்டு நவம்பரில்,150 மி.மீ., மழை பெய்திருந்தது. இந்த ஆண்டு இதுவரை 10 முதல் 20 மி.மீ., அளவே மழை பெய்துள்ளது.

ஆண்டு சராசரி மழையளவு 924 மி.மீ., ஆனால் இதுவரை 330 மி.மீ., என்ற அளவிலேயே மழை பெய்துள்ளது. கடும் வறட்சியை சமாளிக்க முடியாமல் விவசாயிகள் திணறி வருகின்றனர். இதையடுத்து, பயிர்களை வறட்சியிலிருந்து காப்பாற்றும் பொருட்டு, சிவகங்கை மாவட்டத்தில், செட்டிநாடு மானாவாரி ஆராய்ச்சி நிலையம் சார்பில், முதற் கட்டமாக 2500 ஏக்கரில், "பி.பி.எப்.எம்., (பிங் பிக்மென்டட் பேக்கல்டேட்டிவ் மெத்லோடிராப்ஸ்)' எனப்படும் நுண்ணுயிரி தெளிக்கப்பட உள்ளது. இதே போல் ராமநாதபுரம் மாவட்டத்திலும், 2500 ஏக்கரில் தெளிக்கப்பட உள்ளது.

காரைக்குடி திருவேலங்குடி பகுதியில் நுண்ணுயிரி தெளிக்கும் பணியை தொடங்கி வைத்து, மானாவாரி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் சுவாமிநாதன் கூறும்போது: பயிர்களை வறட்சியிலிருந்து, 10 முதல் 15 நாட்கள் வரை காப்பாற்றும் வகையில், சிவகங்கை மாவட்டத்தில், பி.பி.எப்.எம்., நுண்ணுயிரி தெளிக்கப்பட்டு வருகிறது. இந்த நுண்ணுயிரி இலைகளிலிருந்து வெளியாகும் மெத்தனால் எனும் கரிம வேதிப்பொருளை உணவாக கொண்டு,பயிர்களுக்கு நன்மைகளை செய்யும். ஒரு லிட்டர் நீரில் 10 மில்லி லிட்டர் நுண்ணுயிர் உரம் கலந்து தெளிக்க வேண்டும். விவசாயிகள்,

செட்டிநாடு ஆராய்ச்சி நிலையத்தில் இவற்றை பெற்று கொள்ளலாம், என்றார். சாக்கோட்டை வேளாண் உதவி இயக்குனர் மணிவண்ணன், பேராசிரியர்கள் கண்ணன், பரமசிவம் உடனிருந்தனர்.

**வாழைத்தார் விலை அதிகரிப்பு சரிந்தது இலைக்கட்டு விலை**

சிவகங்கை : கார்த்திகை விரதம் துவங்கியதால், சிவகங்கை அருகே வாழைக்காய், இலை சந்தையில், வாழைத்தார்களின் விலை உயர்ந்தன. அதேநேரம், இலை கட்டுகளின் விலை குறைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

கார்த்திகையில் மாலை, மார்கழியில் பூஜை, தை-யில் ஐயப்பன், முருகனை காண,

பக்தர்கள் விரதமிருந்து வருகின்றனர்.விரத காலங்களில், பூஜைக்கு பக்தர்கள் அதிகம் வாழை பழம், இலைகளை பயன்படுத்துவர். இதனால் வாழை பழங்கள் விலை உயர்ந்துள்ளன.முகூர்த்த காலங்கள் இல்லாததும், வரத்து அதிகரித்து விட்டதால், இலை கட்டுகளின் விலை கடுமையாக குறைந்துள்ளதாக, விவசாயிகள் தெரிவித்தனர். சிவகங்கை அருகே தேவன்கோட்டை, மலம்பட்டி, அழகிச்சிபட்டி, கூட்டுறவுபட்டி, செவல்பட்டி உட்பட அதன் சுற்றுப்புற கிராமங்களில், ஏராளமான விவசாயிகள் வாழை நடவு செய்துள்ளனர். இங்கு, ரஸ்தாளி, நாடு, பூவன், ஒட்டு ரக வாழைகள் அதிகளவில் பயிரிட்டுள்ளனர்.

இங்கு விளையும் வாழைத்தார், இலைகள், வி.மலம்பட்டி மொத்த விற்பனை சந்தைக்கு வரும். திருச்சி, ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களை சேர்ந்த, வியாபாரிகள் ஏலம் எடுப்பர். வாரத்தில் செவ்வாய், வெள்ளியன்று சந்தை நடக்கும். நாள் ஒன்றுக்கு, 7 முதல் 10 ஆயிரம் வாழை தார்களும், இலையும் (ஒரு கட்டுக்கு 200 இலைகள்) 2 முதல் 3 ஆயிரம் கட்டுகள் வரை விற்பனைக்கு வரும்.

கடந்த வாரம் மார்க்கெட்டில் நடந்த ஏலத்தில், கார்த்திகை விரத மாதங்களாக இருப்பதால், வாழைத்தார்களின் விலை உயர்ந்திருந்தன. அதேநேரம், வாழை இலைகளின் தேவை அதிகரித்தபோதும், வரத்து அதிகரித்துவிட்டதால், இலை கட்டுகள் விலை, குறைந்துள்ளதாகவிவசாயிகள் தெரிவித்தனர்.

வாழைத்தார் விலை:

ரஸ்தாளி (ஒரு தார்) - ரூ.550

நாடு - ரூ.300

பூவன் - ரூ.300

ஒட்டு ரகம் - ரூ.280.

இலை கட்டு - ரூ.100 - 150.

கடந்த வாரத்தோடு ஒப்பிடுகையில், தார் விலை ரூ.100 அதிகரித்தும், இலைகட்டு விலை, ரூ.350 வரை குறைந்தும் காணப்பட்டன.

**கடல் கொந்தளிப்பு நண்டு பாடு குறைவு**

பனைக்குளம் : கடல்கொந்தளிப்பால், நண்டு பாடு குறைந்து நாட்டுப்படகு மீனவர்கள் தவிக்கின்றனர்.
பனைக்குளம் கிருஷ்ணாபுரத்தில், 50க்கும் மேற்பட்ட நாட்டுப்படகு மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இப்பகுதி மீனவர்களின் முக்கிய தொழில், நண்டுகளை பிடித்து விற்பது. இதற்காக வியாபாரிகளிடம் முன்தொகை பெற்று, பிடிக்கும் நண்டுகளை ஒரு கிலோ ரூ.220 வரை விற்கின்றனர்.
கடந்த மூன்று மாதங்களாக நண்டுகள் பிடிபடுவதில்லை. கடலுக்கு நண்டு பிடிக்கச்சென்றாலும் படகொன்றுக்கு 3 கிலோ நண்டு பிடிபடுவது அரிதாக உள்ளது. இதனால் நாட்டுப்படகு மீனவர்கள் நண்டு தொழிலை கை விட்டு, கரைவலை மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.
கடல் கொந்தளிப்பால், கரைவலை தொழிலிலும் சொல்லும்படியாக இல்லை.
மீனவர் ரத்தினசாமி கூறியதாவது: நான் 40 ஆண்டுகளுக்கு மேலாக, மீன்பிடி தொழிலில் உள்ளேன். இந்த ஆண்டு போல எப்போதும் நண்டுபிடி தொழில் எங்களை வஞ்சித்ததில்லை. வாங்கிய கடனை திரும்ப செலுத்த முடியாமல் கஷ்டப்படுகிறோம். கடந்த மூன்று மாதங்களாக தொழிலுக்கு செல்லவில்லை, என்றார்.

**கோமாரி நோய் தாக்குதல்: போலி டாக்டர்களை நம்புவதால் பாதிப்பு**

கொடைக்கானல் : ""கொடைக்கானலில் கோமாரி நோய் தாக்கிய மாடுகளின் உரிமையாளர்கள், போலி டாக்டர்களை நாடுவதால் இறப்பு ஏற்படுகிறது, என, கால்நடை மருத்துவர் ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.
அவர் கூறியதாவது: கொடைக்கானல் நகரில் 726 மாடுகள், ஆயிரத்து 500 ஆடுகள், 2500 கோழிகள் உள்ளன.
ஆறு மாதத்திற்கு ஒருமுறை கோமாரி நோய் தடுப்பூசி, அரசு சார்பில் இலவசமாக கால்நடைகளுக்கு போடப்படுகிறது. வீடுதேடிச் சென்று, ஊசி போடப்போனால், பலர் வேண்டாம் என மறுக்கின்றனர்.

காரணம், தடுப்பூசி போட்டால், 3 நாட்களுக்கு மாட்டில் பால் குறையும். இவ்வாறு மறுத்தவர்களின் மாடுகளுக்குத்தான் கோமாரி நோய் தாக்குதல் ஏற்படுகிறது. நோய் அறிகுறி தெரிந்தவுடன் மாடுகளை அரசு கால்நடை மருத்துவமனைக்கு அழைத்து வந்தால், சிகிச்சை கொடுத்து காப்பாற்ற முடியும். கருவாட்டை நீரில் ஊறவைத்து, அதை மாட்டின் மீது தெளித்தால் நோய் குணமாகும் என போலி டாக்டர்கள் ஏமாற்றுகின்றனர். மாடு வளர்ப்பவர்கள் சிலரும் இதை நம்புகின்றனர். போலி டாக்டர்கள் மீது புகார் கொடுக்க தயங்குகின்றனர்.கோமாரி நோய் தாக்கி, இறக்கும் தருவாயில் உள்ள மாடுகளை, இறைச்சிக்காக விற்க கூடாது. இறைச்சியை சாப்பிட்டால், மனிதர்களுக்கு உடல் நலக்கேடு ஏற்படும். நோய் தாக்கிய மாடுகளில் இருந்து பால் கறந்து விற்க கூடாது. பாலை வாங்கி அருந்துவோருக்கு கடும் பாதிப்பு ஏற்படும், என்றார்.

**ஏமாற்றும் பருவமழையால் விவசாயிகள் கவலை**

ஒட்டன்சத்திரம் : ஒட்டன்சத்திரத்தில் எதிர்பார்த்தபடி பருவமழை சரிவர பெய்யாததால், புகையிலை மக்காச் சோளம் பயிரிட்ட விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றி உள்ள கிராமப் பகுதிகளில் கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை சரிவர பெய்யவில்லை. இந்த ஆண்டும் பருவ மழை பொய்த்து வருவதால் வேகமாக தொடங்கப்பட்ட வேளாண் பணிகளில் சுணக்கம் அடைந்துள்ளது.

சில நாட்களுக்கு முன்பு ஒட்டன்சத்திரம் நகர் பகுதியில் பெய்த மழை கிராமப்பகுதிகளில் பொய்த்துப் போனது. இங்குள்ள குளங்களுக்கு நீர்வரத்து சிறிதளவு கூட இல்லை. பெய்த சிறிதளவு மழையை நம்பி, கிணற்றுப் பாசனம் உள்ள நிலங்களில் மானாவாரியாக புகையிலை, மக்காச்சோள நாற்றுகளை விவசாயிகள் நட்டனர்.

தொடர்ந்து மழைகாலமாக இருப்பதால், கிணற்றுக்கு நீர் வந்துவிடும் என்ற எதிர்பார்ப்புடன் நடப்பட்ட இத்தகைய பயிர்கள் நீரின்றி காய்ந்து விடும் நிலையில் உள்ளது. நிலங்களுக்கு நீர்பாய்ச்ச முடியாத அளவிற்கு நீர் வரத்து மிகவும் குறைவாக இருந்ததால் செய்வதறியாமல் விவசாயிகள் தவித்துவருகின்றனர்.கடந்த ஆண்டுகளைப் போல் இந்த வருடமும் மழை இல்லாமல் போய்விடுமோ என்ற எண்ணத்தில் விவசாயிகள் மேற்கொண்டு வேளாண் பணிகளை செய்யாமல் காலம் தாழ்த்தி வருகின்றனர்.

**சிறுதானிய உற்பத்தியில் வேளாண் துறை கவனம்**

திண்டுக்கல் : சிறுதானிய உற்பத்தியை அதிகரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு வேளாண் துறைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.
உடலில் ஏற்படும் பெரும்பாலான பாதிப்புகளுக்கு காரணம் பாரம்பரிய உணவுகளை உட்கொள்ளாமல் இருப்பதுதான் என்பது பல்வேறு தரப்பினரின் கருத்தாக உள்ளது. உடலில் உள்ள கொழுப்பு, சர்க்கரை போன்றவற்றை கட்டுப் படுத்தும் சிறுதானியங்கள் அதிகமாக உள்ளது. தேவை குறைவு காரணமாக விவசாயிகள், இவற்றை போதுமான அளவிற்கு விளைவிப்பதில்லை. இதனால் வரகு, திணை, குதிரை வாலி, சாமை, சோளம், கம்பு, ராகியின் விலை அதிகமாக உள்ளது.
சிறுதானிய உற்பத்தியை பெருக்குவதற்காக விவசாயிகளுக்கு தேவையான விதைகளை வழங்குவதோடு, அவர்களை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு வேளாண் துறைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. இதையடுத்து விவசாயிகளுக்கான சாகுபடி பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.
விவசாயிகளிடமிருந்து சிறுதானியங்களை கொள்முதல் செய்து, தேவையான உணவு பொருளாக்கி விற்பனை செய்ய வேளாண்துறை முடிவு செய்துள்ளது.

**நோய் தடுப்பு விழிப்புணர்வு முகாம்**

மயிலம்:மயிலம் அடுத்த தழுதாளி, கண்ணியம் கிராமங்களில் தொற்று நோய் தடுப்பு விழிப்புணர்வு முகாம் நடந்தது.
மயிலம் வட்டார அரசு தலைமை மருத்துவ அலுவலர் தேன் மொழி தலைமை தாங்கினார். சுகாதார மேற்பார்வையாளர் வாசு முன்னிலை வகித்தார். சுகதார ஆய்வாளர்கள் ஏழுமலை, துரைசாமி வரவேற்றனர். கிராமத்தில் சுகாதார குழுவினர் தெருக்கள், குடிநீர் தொட்டிகள், பள்ளி வளாகம் ஆகியவற்றை சுத்தம் செய்தனர். நீர் தேங்கி நிற்கும் இடங்களில் கொசு புழுக்கள் கண்டறிந்து அழித்தனர்.உள்ளாட்சி பிரதிநிதிகள், சுகாதார செவிலியர்கள் தேவகி, தனம், சுடர் கொடி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளிடம் நேரடி நெல் கொள்முதல் : தேசியவாத காங்., தலைவர் வலியுறுத்தல்**

புதுச்சேரி : விவசாயிகளிடமிருந்து இந்திய உணவுக் கழகம் நேரடியாக நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என தேசியவாத காங்., வலியுறுத்தியுள்ளது. இது குறித்து அக்கட்சியின் தலைவர் சுந்தரமூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கை: புதுச்சேரியில் உரவிலை ஏற்றம், உரத்தட்டுப்பாடு, விவசாயப்பணிக்கு ஆள் பற்றாக்குறை விவசாய பணி செய்வதற்கு கூலி உயர்வு போன்றவற்றைக் கருத்தில் கொண்டு விவசாயம் செய்வதற்கு விவசாயிகள் தீவிரம் காட்டுவதில்லை. மேலும், விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லை ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு விற்பனைக்குக் கொண்டு வரும்போது இடைத்தரகர்கள் கூட்டு சேர்ந்து அவர்களுக்குள்ளாக விலை நிர்ணயம் செய்து அடிமாட்டு விலைக்கு கொள்முதல் செய்வதால் விவசாயிகளுக்கு மத்திய அரசு நிர்ணயித்த விலை கிடைக்காமல் ஏமாற்றம் அடைகின்றனர். தற்போது மத்திய அரசு குவிண்டால் ஒன்றுக்கு 1250 ஆக உயர்த்தியுள்ளது. இந்த விலை விவசாயிகளுக்கு போய் சேருவதற்கு இந்திய உணவுக் கழகம் நேரடியாக நெல் கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.அரசு கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை ஒற்றை அவியல் அரிசியாக்கி

மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும். இப்படி அரசு செயல்படுவதன் மூலம் விவசாயிகளுக்கு மத்திய அரசு நிர்ணயித்த விலை கிடைக்கும். மில் அதிபரிடம் கொள்முதல் செய்யப்பட்ட தரமற்ற அரிசியால் அரசுக்கு ஏற்படும் இழப்பு, அவப்பெயர் தடுத்து நிறுத்த முடியும். எனவே அரசு இது தொடர்பாக ஆலோசனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**விருதையில் கோடைக்கு முன் தர்ப்பூசணி விற்பனை "ஜோர்'**

விருத்தாசலம்:விருத்தாசலத்தில் கோடை காலத்திற்கு முன்பே தர்ப்பூசணிப் பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளன.
கோடை காலங்களில் வெயிலின் வெப்பத்தை தணிக்கக் கூடிய தர்பூசணிக்கு பொது மக்களிடையே அதிக வரவேற்பு இருக்கும். சாலையோரங்களில் கடைகள் போடப்பட்டு தர்ப்பூசணி அமோகமாக விற்பனையாகும்.
இந்தாண்டு, பருவமழை போதுமான அளவு பெய்யாத நிலையில், தற்போது பனி பொழிவு துவங்கியுள்ளது. இந்நிலையில், விருத்தாசலம் அடுத்த கவனை, சித்தேரி பகுதி விவசாயிகள் கார்த்திகைப் பட்டத்திற்கு முன்பாகவே தர்ப்பூசணியை பயிர் செய்துள்ளனர். தற்போது தர்ப்பூசணி விளைந்து பழுத்துள்ளதால், விருத்தாசலம் பகுதியில் விற்கப்படுகிறது.
வேளாண் அலுவலர் அன்பழகன் கூறுகையில், "தர்ப்பூசணி எந்த சீசனில் வேண்டுமானாலும் விளையக்கூடியது. கோடை வெயில் நேரத்தில்தான் சாகுபடி செய்யப்படுகிறது. இந்தாண்டு வடகிழக்குப் பருவமழை முடிந்ததால், விவசாயிகள் முன்கூட்டியே பயிர் செய்துள்ளனர்' என்றார்.

**பூக்கள் விலை "கிடுகிடு' உயர்வு**

கடலூர்:பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பூக்களின் விலை "கிடுகிடு' வென உயர்ந்துள்ளது.தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கோவில்கள், வீடுகள், அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் சுவாமிக்கு பூஜைகள் செய்வதற்காக பூக்கள் பயன்படுகிறது. இதனால் பூக்கள் தேவை அதிகரித்ததுள்ளது. இதனையொட்டி கடலூர், திருப்பாதிரிப்புலியூரில் உள்ள பூ

மார்க்கெட்டில் சேலம், பெங்களூரு, ஓசூர் உட்பட பல்வேறு பகுதிகளில் இருந்து பல்வேறு விதமான பூக்களை விற்பனைக்காக வியாபாரிகள் தங்கள் கடைகளில் குவித்து வைத்திருந்தனர்.

பூக்களை பொதுமக்களும், வியாபாரிகளும் போட்டி போட்டு வாங்கிச் சென்றனர். இதனால் பூ விற்பனை ஜோராக நடந்தது. கடந்த மூன்று நாட்களாக பூக்களின் விலை "கிடு கிடு' என உயர்ந்துள்ளது. ஒரு கிலோ மஞ்சள் சாமந்தி 100 ரூபாய் முதல் 120, வெள்ளை சாமந்தி 200, கனகாம்பரம் 800, முல்லை அரும்பு 800, குண்டு மல்லி 500, உலாந்தை 500, பைவ் ஸ்டார் ரோஸ் 160 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. கடலூர்:பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பூக்களின் விலை "கிடுகிடு' வென உயர்ந்துள்ளது.

தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கோவில்கள், வீடுகள், அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் சுவாமிக்கு பூஜைகள் செய்வதற்காக பூக்கள் பயன்படுகிறது. இதனால் பூக்கள் தேவை அதிகரித்ததுள்ளது. இதனையொட்டி கடலூர், திருப்பாதிரிப்புலியூரில் உள்ள பூ மார்க்கெட்டில் சேலம், பெங்களூரு, ஓசூர் உட்பட பல்வேறு பகுதிகளில் இருந்து பல்வேறு விதமான பூக்களை விற்பனைக்காக வியாபாரிகள் தங்கள் கடைகளில் குவித்து வைத்திருந்தனர்.

பூக்களை பொதுமக்களும், வியாபாரிகளும் போட்டி போட்டு வாங்கிச் சென்றனர். இதனால் பூ விற்பனை ஜோராக நடந்தது. கடந்த மூன்று நாட்களாக பூக்களின் விலை "கிடு கிடு' என உயர்ந்துள்ளது. ஒரு கிலோ மஞ்சள் சாமந்தி 100 ரூபாய் முதல் 120, வெள்ளை சாமந்தி 200, கனகாம்பரம் 800, முல்லை அரும்பு 800, குண்டு மல்லி 500, உலாந்தை 500, பைவ் ஸ்டார் ரோஸ் 160 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

**மாங்காய் விலை குறைவு நேரடி விற்பனையில் விவசாயிகள்**

கம்மாபுரம்:கம்மாபுரம் பகுதியில் மாங்காய் விளைச்சல் அமோகமாக உள்ள நிலையில், விலை குறைவால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கம்மாபுரம் அடுத்த முதனை, இருப்புகுறிச்சி, இருளக்குறிச்சி, தெற்கிருப்பு, வடக்கிருப்பு,

கிழக்கிருப்பு, மேற்கியிருப்பு, ஊ.அகரம், பெரியகாப்பாங்குளம், சின்னகாப்பாங்குளம் வி.சாத்தமங்கலம் உட்பட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயிகள் அதிகளவு முந்திரி, மா, பலா பயிர் செய்திருந்தனர்.
கடந்த 2011ல் வீசிய "தானே' புயலில் முந்திரி, மா, பலா மரங்கள் கடுமையாக சேதமடைந்தன. இதனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக மாங்காய் விளைச்சல் குறைந்து விவசாயிகள் பாதித்தனர். இந்நிலையில், இந்தாண்டு மாங்காய் விளைச்சல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். அதிக விளைச்சல் காரணமாக, கிலோ மாங்காய் 5 முதல் 10 ரூபாய் வரை குறைந்த விலைக்கு வியாபாரிகள் கொள்முதல் செய்வதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.இடக்குப்பம் விவசாயி கருப்பன் கூறுகையில், "தானே' புயலில் எனது தோப்பில் ஏராளமான மா மரங்கள் சேதமடைந்தன. மீதமுள்ள மரங்களில் மாங்காய் காய்ப்பு அதிகமாக உள்ளது. ஆனால் வியாபாரிகள் 5 முதல் 10 ரூபாய் வரை மட்டுமே கொள்முதல் செய்வதால், விவசாயிகளே நேரடியாக அருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று, கிலோ மாங்காய் 10 முதல் 13 ரூபாய் வரை விற்கிறோம்' என்றார்.

### கோமாரி பரவலைத் தடுக்க தீவிர நடவடிக்கை கால்நடைத்துறை இணை இயக்குனர் தகவல்

விருத்தாசலம்:கோமாரி நோய் பரவலைத் தடுக்க தீவிர தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக கால்நடைத்துறை இணை இயக்குனர் தெரிவித்தார்.
தமிழகத்தில் கடந்த, 2011ல் பொறுப்பேற்ற அ.தி.மு.க., அரசு விலையில்லா ஆடு, மாடுகளை வழங்கி வருகிறது. அதனை பாதுகாக்க தமிழக அரசு கால்நடைத்துறை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கோமாரி நோய் தடுப்பு முகாம்களை நடத்தி வருகிறது.கடந்த மாதம் கடலூர் மாவட்டத்திலுள்ள 3.15 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசிப் போடப்பட்டதாக கால்நடைத் துறை அறிவித்தது.
கடந்த மாதம் துவங்கிய வட கிழக்குப் பருவமழையைத் தொடர்ந்து விருத்தாசலம்,

கம்மாபுரம், சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், சேத்தியாத்தோப்பு பகுதிகளில் மாடுகளுக்கு கோமாரி நோய் பரவியது. இதனால், மாவட்டத்தில் 1,000க்கும் மேற்பட்ட மாடுகள் இறந்தன.விரக்தியடைந்த விவசாயிகள் இறந்த மாடுகளை ஆறுகள், நீரோடைகள், சாலையோரங்கள், வனப் பகுதிகள், ஊரின் ஒதுக்குப்புறங்கள் என ஆங்காங்கே திறந்த வெளியில் வீசிச் சென்றதால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டது.அதைத் தொடர்ந்து கால்நடைத்துறை தடுப்பு நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.
இது குறித்து இணை இயக்குனர் (கால்நடைத்துறை) மதிவாணன் கூறுகையில், "மாவட்டத்தில் கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்படுகிறது. இரண்டு டன் சோடியம் கார்பனேட், சோடியம் ஹைட்ராக்சைடு வாங்கி, அனைத்து, கிராம, நகர, பேரூர் பஞ்சாயத்துக்களுக்கு வழங்கப்பட்டுள் ளது. போதுமான தடுப்பூசிகள் வாங்கப்பட்டுள்ளது.
அந்தந்த ஊராட்சிகள் அல்லது நகராட்சி அலுவலகங்களில் உள்ள சோடியம் ஹைட்ராக்சைடு அல்லது சோடியம் கார்பனேட் (வாஷிங் சோடாவை) பொது மக்கள் பெற்று 4 சதவீத கரைசலை மாடுகள் கட்டப்படும் இடங்களில் தெளித்து சுத்தமாக வைத்தால் முற்றிலும் தடுக்கலாம். சினை மாடுகள், பால் கறக்கும் மாடுகளுக்குப் கோமாரி தடுப்பூசி போடக்கூடாதென மக்கள் நினைப்பது தவறு. அனைத்து மாடுகளுக்கும் தடுப்பூசி போட வேண்டும்' என்றார்.

### கொள்முதல் நிறுத்தம் கொப்பரை விலை சரிவு

பல்லடம் · தீபாவளிக்கு தொழிலாளர்கள் விடுமுறையில் சென்றதால், கொப்பரை கொள்முதல் விலை டன் னுக்கு 6,000 ரூபாய் குறைந்துள்ளது.
பல்லடம் பகுதியில் 250க்கும் மேற்பட்ட கொப்பரை உற்பத்தி களங்கள் உள்ளன. இங்கு உற்பத்தி செய்யப்படும் கொப்பரை, பல்லடம் மற்றும் செஞ்சேரி அரசு கொள்முதல் மையங்கள் மற்றும் காங்கயம், வெள்ளக்கோவிலில் உள்ள வெளிமார்க்கெட்டில் விற்கப்பட்டன. அரசு மையத்தில் ஒரு கிலோ கொப்பரை ரூ.52.50க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. வெளிமார்க்கெட்டில் ஒரு கிலோ கொப்பரை கொள்முதல் விலை ரூ.70 ஆக இருந்தது.

தீபாவளி பண்டிகைக்காக, தொழிலாளர்களுக்கு நான்கு நாட்களுக்கு முன்பிருந்து விடுப்பு அளிக்கப்பட்டதாலும், காங்கயம், வெள்ளக்கோவில் பகுதிகளில் உள்ள தேங்காய் எண்ணெய் மில் தொழிலாளர்களுக்கும் விடுப்பு அளிக்கப்பட்டுள்ளதாலும், பல்லடம் பகுதியில் கடந்த இரு நாட்களாக கொப்பரை கொள்முதலுக்கு வியாபாரிகள் வரவில்லை. இதன் எதிரொலியாக, ரூ.70 ஆயிரமாக இருந்த ஒரு டன் கொப்பரை, நேற்று டன்னுக்கு ரூ.6,000 சரிந்து 64 ஆயிரமாக இருந்தது.

**காய்கறி வரத்து பாதியாக குறைவு**

திருப்பூர் · திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில், காய்கறி வரத்து பாதியாக குறைந்துள்ளது.

பெருமாநல்லூர், அவிநாசி, சேவூர், மேற்குபதி, அம்மாபாளையம் பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள், காய்கறிகளை விற்பனை செய்வதற்காக, திருப்பூர் வடக்கு உழவர் சந்தைக்கு கொண்டு வருகின்றனர். நாளொன்றுக்கு சராசரியாக 64 டன் வரை வரத்து இருக்கும். கடந்த ஆக., மாதம், 5,642 விவசாயிகள் 1,996 டன் காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்; இரண்டு லட்சத்து 49 ஆயிரத்து 670 நுகர்வோர் காய்கறி வாங்கியுள்ளனர். மொத்தம் ரூ.4.92 கோடிக்கு காய்கறி வர்த்தகம் நடந்துள்ளது. நாளொன்றுக்கு 14 பேர் வீதம், மொத்தம் 428 விவசாயிகள், ரூ.4.74 லட்சம் மதிப்புள்ள காய்கறிகளை குளிர்பதன கிடங்கில் பாதுகாப்பாக வைத்துள்ளனர்.

தீபாவளி பண்டிகை காரணமாக, சந்தைக்கு காய்கறி வரத்து குறைந்துள்ளது. கடந்த 1ம் தேதி, காய்கறி வரத்து 52 டன்னாக குறைந்திருந்தது. நுகர்வோர் வருகையும் குறைந்துள்ளதால், நேற்று காய்கறி வரத்து, 31 டன்னாக சரிவடைந்தது.நிர்வாக அலுவலர் ராதாகிருஷ்ணனிடம் கேட்டபோது, ""தீபாவளி பண்டிகைக்கு பலரும் சொந்த ஊர்களுக்கு சென்றுள்ளதால், சந்தைக்கு நுகர்வோர் வரத்து குறைந்துள்ளது. இதனால், விவசாயிகள் சந்தைக்கு காய்கறி கொண்டு வருவதை குறைத்து, உள்ளூரிலேயே விற்பனை செய்கின்றனர். இன்று (நேற்று) சந்தைக்கு மொத்த காய்கறி வரத்து, 31 டன்னாக குறைந்தது,'' என்றார்.

**கூடுதல் விலை இல்லாததால் மஞ்சள் விவசாயிகள் கவலை**

பெ.நா.பாளையம்:மஞ்சளுக்கு கூடுதல் விலை இல்லாததால், பெரியநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் மஞ்சள் பயிரிட்ட விவசாயிகள் கவலையில் ள்ளனர்.பெரியநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் கூடலூர், மத்தம்பாளையம், காளிபாளையம், சாமநாயக்கன்பாளையம், வெள்ளமடை உள்ளிட்ட பகுதிகளில் தென்னை, கரும்பு, மஞ்சள், வாழை மற்றும் காய்கறி சாகுபடி நடக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக காய்ந்த மஞ்சள் குவிண்டால் ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாயில் இருந்து 23 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையானது.

இதை நம்பி ஏராளமான விவசாயிகள் மஞ்சள் பயிரிட்டனர். நடப்பாண்டு இதுவரை மஞ்சளுக்கு கட்டுப்படியான விலை கிடைக்காததால் மஞ்சள் பயிரிட்ட விவசாயிகள் சோகத்தில் உள்ளனர்.மத்தம்பாளையத்தில் மஞ்சள் பயிரிட்ட விவசாயிகள் கூறியதாவது: பொதுவாக ஒரு ஏக்கர் மஞ்சள் சாகுபடி செய்ய உயர் ரகம் என்றால் 750 கிலோ விதை மஞ்சள் தேவைப்படும். இதுவே நாட்டு விதை என்றால் ஒரு ஏக்கருக்கு 900 கிலோ பிடிக்கும். ஒரு ஏக்கர் மஞ்சளை விளைவிக்க விதை மஞ்சளை தவிர உழவு, நடவு, உரம் என கணக்கு பார்த்தால் குறைந்த பட்சம் 60 ஆயிரம் ரூபாய் செலவாகும்.

விதை மஞ்சளை சேர்த்தால், அப்போது இருக்கும் மார்கெட் விலையை பொறுத்து 10 முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை கூடுதல் செலவாகும். பத்து மாத பயிரான மஞ்சளுக்கு 5 நாளைக்கு ஒரு முறை தண்ணீர் விட வேண்டும். விளைந்த மஞ்சளை வேகவைத்து, காயவைத்து, பாலீஷ் போட்டு விற்பனை செய்யும் போது டன் ஒன்று, ஒரு லட்ச ரூபாய்க்கு விற்பனையாக வேண்டும். அப்போதுதான் சிறிது லாபம் கிடைக்கும். அதாவது குவிண்டால் 10 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாக வேண்டும். ஆனால், இன்றைய நிலவரப்படி காய்ந்த மஞ்சள் குவிண்டால் 6500 ரூபாய்க்கு விற்பனையாகிறது. மஞ்சள் பயிர் செய்ய, மற்ற பயிர்களை விட அதிகம் செலவாகும். இது தவிர நோய் பாதிப்பு ஏற்பட்டால் மருந்து அடிப்பது அதை பராமரிப்பு செய்ய இன்னும் கூடுதல் செலவாகும்.இவ்வாறு, விவசாயிகள் தெரிவித்தனர்.

**கோவை:"விவசாயிகள் கம்பு பயிரிட, இது சரியான காலம்' என, கோவை வேளாண் பல்கலை தெரிவித்துள்ளது.**

கார்த்திகை பட்டத்தில் பயிரிடப்படும் முக்கிய பயிர் கம்பு. விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வகையில் விதைப்பு முடிவை எடுக்க வேண்டும். கோவை வேளாண் பல்கலை தேசிய வேளாண் புதுமைத்திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி தந்தை தகவல் மையம் வெளியிட்டுள்ள அறிக்கை: உலக அளவில் கம்பு உற்பத்தி செய்யும் நாடுகளில், இந்தியா முதலிடம் வகிக்கிறது. இது வறட்சியான நிலையில் கூட வளரக்கூடிய பயிர். தற்போது கோழித் தீவனமாகவும், கால்நடை பச்சை தீவனமாகவும் கம்பு பயன்படுகிறது.

தமிழகத்தில் 0.46 லட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு, 1.14 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது.

வர்த்தக தகவல்களின்படி, கடந்த ஆண்டு நல்ல விலை கிடைத்ததால், இந்த ஆண்டு மக்காச்சோள சாகுபடி அதிகரித்துள்ளது. அதனால், கம்பு பயிரிடும் பரப்பளவு குறைய வாய்ப்பு உள்ளது.

கோவில்பட்டி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் கடந்த 17 ஆண்டுகளாக இருந்த விலையை ஆய்வு செய்ததில், 2014 மாசி, பங்குனி அறுவடையின் போது, கம்பு விலை ஒரு கிலோவுக்கு 13 ரூபாய் வரை விலை கிடைக்கும் என, கணக்கிடப்பட்டுள்ளது. தற்போது கோவில்பட்டியில் கம்பு விலை ஒரு கிலோவுக்கு 14 ரூபாய் உள்ளது. இந்த விலையின் அடிப்படையில், விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்கலாம்.

இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.கம்பு பயிரிட இது தகுந்த காலம் வேளாண் பல்கலை அறிவிப்பு

**கொப்பரை ஏலத்தில் வரத்து குறைவு**

ஆனைமலை : ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நடந்த கொப்பரை ஏலத்தில், குறைவான விவசாயிகளே கொப்பரை பருப்புகளை கொண்டு வந்தனர். இங்கு, செவ்வாய்க்கிழமை தோறும் கொப்பரை ஏலம் நடைபெறுவது வழக்கம்; நேற்றுமுன்தினம் நடந்த ஏலத்தில், 37 விவசாயிகள் மட்டுமே வந்தனர். 72 மூட்டை கொப்பரைகளே வரத்து இருந்தது. விற்பனைக்கூட கண்காணிப்பாளர் தமிழ்ச்செல்வன் கூறியதாவது: இப்பகுதியில், கடந்த சில நாட்களாக மழை பெய்ந்து வருவதால், கொப்பரைகளில் ஈரப்பதம் அதிகமாக இருந்தது. குறைந்த விலைக்கே கொப்பரை ஏலம் போனது. விவசாயிகள் கொண்டு வந்த கொப்பரையில் தரம் பிரிக்கப்பட்டதில், 40 மூட்டைகள் முதல் தர கொப்பரையாக இருந்தது; இது குறைந்தபட்ச விலையாக, ரூ. 58.25 ஆகவும், அதிகப்பட்ச விலையாக ரூ. 60.60க்கும் ஏலம் போனது. 32 மூட்டைகள் கொண்ட இரண்டாம் தர கொப்பரையின், குறைந்தபட்ச விலை ரூ. 48.75க்கும், அதிகப்பட்ச விலையாக ரூ.56.40க்கும் ஏலம் போனது. வரத்து குறைவாக இருந்ததால் மூன்று வியாபாரிகள் மட்டுமே பங்கேற்றனர்.இவ்வாறு அவர் கூறினார்

**வாழைத்தார் வரத்து குறைவால் விலை உயர்வு**

பொள்ளாச்சி : பொள்ளாச்சி காய்கறி மார்க்கெட்டுக்கு வாழைத்தார் வரத்துக் குறைவால், விலை உயர்ந்து விற்பனையானது. பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டில், வாரம்தோறும் ஞாயிறு மற்றும் புதன்கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடக்கிறது. கோபி, உடுமலை, புதுக்கோட்டை, திருச்சி போன்ற வெளி மாவட்டங்கள்; ஆனைமலை, கோட்டூர், பள்ளிக்கவுண்டன்பாளையம், சேத்துமடை, நஞ்சேகவுண்டன்பாளையம், சிங்காநல்லூர், தொப்பம்பெட்டி போன்ற பொள்ளாச்சி
சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து, மார்க்கெட்டுக்கு வாழைத்தார்கள் ஏலத்துக்கு வருகின்றன.

தொடர்ந்து, காந்தி மார்க்கெட்டில் வாழைத்தார் ஏலம் நேற்று நடந்தது. கடந்த

வாரத்தை விட, வாழைத்தார் வரத்து குறைவாக இருந்தது. பூவம்பழம்-300, கற்பூர வள்ளி-50, மோரிஸ்-300, நேந்திரம்-50, கதளி-100 என, மொத்தம் 800 வாழைத்தார்களே நேற்றைய ஏலத்துக்கு வந்து இருந்தது. அதனால், அனைத்து ரக வாழைத்தார்களும், கடந்த வாரத்தைவிட 50 ரூபாய் முதல் 100 ரூபாய் வரையில் விலை உயர்ந்து விற்பனையானது.வியாபாரிகள் கூறுகையில்,"கடந்த வாரத்தில் தீபாவளிப்பண்டிகை என்பதால், 1,500 க்கு மேற்பட்ட வாழைத்தார்கள் ஏலத்துக்கு வந்தன. வரத்து அதிகரிப்பால், விலைக்குறைந்தும் விற்பனையானது. ஆனால், இந்த வாரம் வாழைத்தார் வரத்துக்குறைவால், அதிக விலைக்கு விற்கப்பட்டன. மோரிஸ் வாழைத்தார் 200 முதல் 400 ரூபாய், பூவம் பழம் 200 முதல் 500 ரூபாய், கற்பூர வள்ளி 200 முதல் 950 ரூபாய், செவ்வாழை 200 முதல் 800 ரூபாய், கதளி 100 முதல் 500 ரூபாய் வரையில் விற்பனையாகின. நேந்திரம் கிலோவிற்கு 45 ரூபாய் வரையிலும் விற்பனையானது," என்றனர்.

"ஐந்தரை அடி உயர வாழைத்தார்': சேத்துமடையைச்சேர்ந்த முத்துமாணிக்கம், ஐந்தரை அடி உயரத்தில் கற்பூர வள்ளி ரக வாழைத்தாரை ஏலத்துக்கு கொண்டு வந்தார். வழக்கமாக, இரண்டரை அடி வரையில் மட்டுமே கற்பூர வள்ளி ரக வாழைத்தார் இருக்கும். ஐந்தரை அடி உயரத்தில் வாழைத்தார் இருந்ததால், வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் ஆச்சர்யமுடன் பார்த்து சென்றனர். 16 சீப்களில் 250 காய்கள் கொண்ட வாழைத்தார் 950 ரூபாய்க்கு விற்பனையானது. நல்ல நீர், மண், பயன்படுத்திய உரம் மற்றும் நுண்ணூட்டச்சத்துகளால், இதுபோன்ற உயரத்தில் வாழைத்தார் கிடைக்கும் என தோட்டக்கலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட மாநாடு**

கிருஷ்ணகிரி: அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கத்தின், கிருஷ்ணகிரி மாவட்ட மாநாடு நடந்தது. ராமசாமி தலைமை வகித்தார். பெரியசாமி, நாகராஜ், விஜயகுப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். எத்திராஜ் வரவேற்றார். மாநில பொது செயலாளர் மணி தீர்மானங்கள் குறித்து பேசினார். "தேசிய ஊரக வேலை

வாய்ப்பு திட்டத்தை, 200 நாட்களாக உயர்த்தி நாள் ஒன்றுக்கு, 300 ரூபாய் கூலி வழங்க வேண்டும், விவசாய தொழிலாளர்களுக்கு நிபந்தனை இன்றி முதியோர் உதவித்தொகை வழங்க வேண்டும். அரசு புறம்போகு நிலங்களில், நீண்டகாலமாக சாகுபடி செய்து வருபவர்களுக்கு பட்டா வழங்க வேண்டும்' என்பன உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றபட்டது.

மாநாட்டில், சங்கத்தின் மாவட்ட அமைப்பாளர் கோவிந்சாமி, மாவட்ட தலைவர் தருமன், செயலாளர் இருதயராஜ், ஒன்றிய பொறுப்பாளர்கள் கந்தசாமி, சக்தி, எல்லப்பா, கிருஷ்ணபா, பூபதி மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் சேகர், செயற்குழு உறுப்பினர் நஞ்சுண்டன், சி.ஐ.டி.யூ., மாவட்ட செயலாளர் பீட்டர் ஆகியோர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**தென்னை மரத்திலிருந்த விஷ வண்டுகள் அழிப்பு**

வேலாயுதம்பாளையம்: வேலாயுதம்பாளையம் அருகே தென்னை மரத்தில் கூடு கட்டியிருந்த விஷ வண்டுகளை தீயணைப்புத்துறை வீரர்கள் அழித்தனர். புன்னம் சத்திரம் சொக்கன் காட்டை சேர்ந்தவர் பெரியசாமி. இவரது வீட்டின் அருகில் உள்ள தென்னை மரத்தில் விஷ வண்டுகள் கூடு கட்டியிருந்தது. அந்த வழியாக சென்ற பொதுமக்களை விஷ வண்டுகள் கடித்தது.

இதனால், தென்னை மரத்தில் உள்ள விஷ வண்டுகளை அழிக்குமாறு பெரியசாமி, வேலாயுதம்பாளையம் தீயணைப்பு படையினரிடம் புகார் அளித்தார்.

இதையடுத்து, நிலையை அலுவலர்(பொ) தியாகராஜன் தலைமையில் தீயணைப்பு படையினர் சொக்கன்காட்டிற்கு சென்று விஷ வண்டுகளை அழித்தனர். இதனால், அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

**கோமாரி நோயினால் இறந்த கால்நடைகளுக்கு இழப்பீடு :இந்திய கம்யூனிஸ்ட் கோரிக்கை**

பாபநாசம்: பாபநாசம் நகர இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை கூட்டம் கணேசன் தலைமையில் நடந்தது. அனைவரையும் நகர செயலாளர் அமுல்ராஜ் வரவேற்றார். ஏ.ஐ.டி.யு.சி., மாவட்ட தலைவர் தில்லைவனம், விவசாய சங்க மாவட்ட துணைதலைவர் சாமுதர்மராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில், நிர்வாகிகள் மாவட்ட துணை செயலாளர் பரமசிவம், மாவட்ட குழு கிருஷ்ணன், விமல்நாத்பைரன், மணிகண்டன், ராஜாத்தி, லட்சுமி உள்ளிட்டோர் பேசினர்.

குண்டும், குழியுமாக உள்ள தஞ்சாவூர் கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலை உடனே சீரமைக்கவேண்டும். கோமாரி நோய் தாக்கப்பட்ட கால்நடைகளுக்கு போர்க்கால அடிப்படையில் சிகிச்சை அளிக்கவேண்டும். கோமாரி நோயினால் இறந்த கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்கவேண்டும்.

பாபநாசம் அரசு மருத்துவமனையில் எலும்பு முறிவு, ஸ்கேன், அவசர சிகிச்சை பிரிவு மற்றும் தேவையான மருந்துகள் உள்ளிட்ட வசதியை ஏற்படுத்தவேண்டும். அனைத்து வார்டுகளிலும் எரியாத மின்விளக்குகளை சரிசெய்யவேண்டும். தெப்பகுளம் மற்றும் கபிஸ்தலம் சாலையில் உள்ள குளங்களை தூர் வாரி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.பொருளாளர் இஸ்மத் பாட்சா நன்றி கூறினார்.

**கால்நடைகளுக்கு இயற்கை மருத்துவ முறை சிகிச்சை: அரசுக்கு கோரிக்கை**

திருத்துறைப்பூண்டி: தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் இயற்கை உழவர் இயக்க மாநில செயலாளர் ஜெயராமன் கூறியுள்ளதாவது: கால்நடைகளை கோமாரி நோயிலிருந்து பாதுகாக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. தடுப்பூசி, மருந்துகளை பயன்படுத்தி கிராமங்களில் கால்நடைத்துறையினரும் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கின்றனர். இந்நிலையில், ஆங்கில மருந்துகள் மூலம் உயிருக்கு போராடும் கால்நடையை காப்பாற்ற முடிவதில்லை. இதனால், விலை அதிகமுள்ள கலப்பின மாடுகளை இழக்க நேரிட்டுள்ளது. களைக்கொல்லி, ரசாயன பூச்சி கொல்லி விஷமும் பயன்படுத்திய வயல்களில் கால்நடைகளை மேய விடுவது, நோய் தாக்குதலை

சமாளிப்பதில் ஏற்பட்டுள்ள தடைக்கு ஒரு முக்கிய காரணமாகும். விஷமாக மாறியுள்ள வயல், வாய்க்காலிலுள்ள தண்ணீரை மாடுகள் குடிப்பதால் கால்நடைக்கு எதிர்ப்பு சக்தி குறைந்து விட்டது. இயற்கை வழி மருத்துவ முறையால் மட்டுமே கால்நடைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்க முடியும்.

தமிழ்நாடு கால்நடை பல்கலையின் அங்கமான தஞ்சை கால்நடை ஆராய்ச்சி நிலைய துறைத்தலைவர் புண்ணியமூர்த்தி, இயற்கை முறையிலான மூலிகை வைத்தியம் மூலம் கோமாரிநோயை குணப்படுத்தி வருகிறார். அதனால், மேற்கண்ட இயற்கை வழி மருத்துவ முறையை கால்நடைகளுக்கு பயன்படுத்தி சிகிச்சை அளித்து, காப்பாற்ற முடியும். இதற்கான வழிமுறையை தமிழ்நாடு கால்நடை பல்கலை மற்றும் தஞ்சை ஆராய்ச்சி நிலையம் கையாள தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**தொற்றுநோய் பாதித்து கால்நடைகள் அவதி**

எட்டயபுரம்:கிராமங்கள் தோறும் தற்போது கால்நடைகளுக்கு ஏற்பட்டுள்ள தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதற்கு, நடமாடும் கால்நடை மருத்துவக்குழுவினர் மூலம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க வேண்டும் என மதிமுக.,விவசாய அணி வலியுறுத்தியுள்ளனர்.எட்டயபுரம், கோவில்பட்டி, நாலாட்டின்புதூர், ஓட்டப்பிடாரம், விளாத்திகுளம் ஆகிய பகுதிகளில் விவசாய தொழிலுக்கு அடுத்தபடியாக ஆடு வளர்ப்பு தொழில் பிரதானமாக நடந்து வருகிறது.இதில் செம்மறி ஆடுகளில் தெற்கத்திஆடு, நாட்டுஆடு, வெள்ளாடுகளில் தலைச்சேரிஆடு, பள்ளிஆடு, சீமைஆடு, நாட்டுஆடு ஆகிய வகைகள் வளர்க்கப்பட்டு வருகின்றது. கடந்த 2 ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால் ஆடுகளுக்கு தீவனம், குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு ஆடு வளர்ப்பவர்கள் மிகவும் சிரமப்பட்டனர். இந்நிலையில் தற்போது பருவமழை பெய்துள்ளதால் தேவையான பசுன்தீவனங்களும், குளம் குட்டைகளில் குடிநீருக்கு சற்று தண்ணீர் தேங்கியுள்ளது. இந்நிலையில் ஆடுகளுக்கு மழைக்காலங்களில் வழக்கம்போல் வாய்காளை, கால்கானை, மூக்குச்சலி, கழிச்சல், வாய்ப்புண்

போன்ற நோய்கள் பரவி வருகிறது. சில கிராமங்களில் ஆடுகள் செத்து மடிகிறது. குட்டியை வளர்த்து ஆடுகளாக உருவாக்குவதற்கு குறைந்த பட்சம் ஒரு வருடம் ஆகிறது.
அவ்வாறு கஷ்டப்பட்டு வளர்க்கப்பட்ட ஆடுகள் நோயினால் செத்து மடியும்போது மிகவும் கவலையாக உள்ளது. இறந்த ஆடுகளின் நோய் வேறு ஆடுகளுக்கு பரவாமல் இருப்பதற்காக பூமிக்குள் உடனடியாக புதைத்து விடுவர். இது தவிர அரசு கால்நடை மருந்தகங்களில் மழைக்கால நோய்களுக்கு ஏற்ப மருந்துகள் இருப்பு இல்லையென்று கூறுகின்றனர். கால்நடை டாக்டர்கள் பாதிக்கப்பட்ட ஆடுகளை பரிசோதித்துவிட்டு மருந்துக்கான சீட்டை கொடுத்து கடைகளில் மருந்து வாங்கி கொடுக்குமாறு தெரிவிக்கின்றனர். இது தவிர கிராமங்கள் தோறும் தற்போது கால்நடைகளுக்கு ஏற்பட்டுள்ள தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதற்கு, நடமாடும் கால்நடை மருத்துவக் குழுவினர் மூலம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க வேண்டும்.இறப்பு விகிதத்தை உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும். கஷ்டப்பட்டு ஆடு வளர்த்து கடைசியில் பலன் கைகூடாமல் நோயினால் மடியும்போது இருந்த நிலைக்கே வாழ்க்கையில் மீண்டும் தள்ளப்படுகின்றனர். கால்நடைகளை காப்பாற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மதிமுக.,விவசாய அணி மாநில துணைச் செயலாளர் வரதராஜன் மனுவில்குறிப்பிட்டுள்ளார்.

## குமரி மாவட்டத்தில் தொடர்ந்து மழை குளச்சலில் 120 மி.மீ அணைகளில் நீர்மட்டம் உயர்வு

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் பெய்துவரும் மழையால், அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. குளச்சலில் அதிகபட்சமாக 120 மி.மீ., மழை பதிவானது. விவசாயத்திற்காக பெருஞ்சாணி அணை திறக்கப்பட்டுள்ளது.

குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. அணைப்பகுதிகளில் போதிய மழை இருப்பதால் அணைகளுக்கு நீர்வரத்து

அதிகரித்து வருகிறது. மழையால் அணைகளில் நீர்மட்டம் அதிகரித்து வருகிறது. நேற்றைய நிலவரப்படி பேச்சிப்பாறையில் 25.90 அடியும், பெருஞ்சாணியில் 60.55 அடியும் தண்ணீர் உள்ளது. இதைப்போன்று சிற்றார் 1ல் 10.07 அடியும், சிற்றார் 2ல் 10.17 அடியும், பொய்கையில் 3.80 அடியும், மாம்பழத்தாறில் 42.65 அடி தண்ணீர் உள்ளது. பேச்சிப்பாறை அணைக்கு விநாடிக்கு உள்வரத்தாக 149 கனஅடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. பெருஞ்சாணிக்கு 157 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. சிற்றார் ஒன்றில் 60கனஅடி தண்ணீரும், சிற்றாறு 2க்கு 89 கனஅடி தண்ணீரும், மாம்பழத்தாறில் 2கனஅடி தண்ணீரும் வந்து கொண்டு இருக்கிறது. அதுபோன்று பெருஞ்சாணி அணையில் இருந்து விவசாயத்திற்கு 200கனஅடி தண்ணீர் வெளியேறி கொண்டு இருக்கிறது.

மழையளவு

நேற்றைய நிலவரபடி குமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை பகுதியில் 26.2 மி.மீ, மழையும், பெருஞ்சாணி பகுதியில் 6.2மி.மீ., சிற்றாறு 1ல் 28.4, 2ல் 30.2மி.மீ., இரணியலில் 79மி.மீ.,குளச்சலில் அதிகபட்சமாக 120மி.மீ., ஆனைகிடங்கில் 5மி.மீ., கோழிபோர்விளையில் 18மி.மீ., திருவட்டாரில் 16மி.மீ., முள்ளாங்கினாவிளையில் 23, சுருளோட்டில் 37, பாலமோரில் 13 மி.மீ., மழையும் பதிவானது.

குமரி மாவட்டத்தில் நேற்று முன் தினம் முதல் நல்ல மழை பெய்து வருகிறது. இதனால் கிணறுகள், குளங்கள் நிரம்பிவருகிறது.

பெய்து வரும் மழையால் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் ரோடுகளில் சாக்கடை கலந்த நீர் ஆறாக பெருக்கெடுத்து ஓடியது. இதனால் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.மழை பெய்து வருவதால் சில நாட்களில் அணை நீர்மட்டம் நன்கு உயரும் வாய்ப்புள்ளது.

**கால்நடைகளை தாக்கும் கோமாரி**

காரியாபட்டி : கால்நடைகளை தாக்கி அழித்து வரும் கோமாரி நோயை, ஆரம்பத்திலே தடுக்க, மாவட்ட நிர்வாகம் போர்க்கால அடிப்படையில்

நடவடிக்கை எடுக்க வேண்டும் என, விவசாயிகள் சங்கம் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட குழு கூட்டம், மாவட்ட தலைவர் குருசாமி தலைமையில்,மல்லாங்கிணரில் நடந்தது. மாவட்ட செயலாளர் விஜயமுருகன் வரவேற்றார். மாநில துணை செயலாளர் சுருளிநாதன் பேசினார். காரியாபட்டி ஒன்றிய செயலாளர் அம்மாசி நன்றி கூறினார். கால்கநடைகளை கோமாரி நோய் தாக்கி வருகிறது.

ஆரம்பத்திலே இந்நோயை கட்டுப்படுத்த, போர்க்கால அடிப்படையில் தடுப்பூசி போட, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நோய் தாக்கி இறந்த கறவை மாடுகளுக்கு 25 ஆயிரம், சினை மாடுகளுக்கு 20 ஆயிரம், சாதாரண மாடுகளுக்கு 15 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும், என்பன போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**22.11.2013**

**கடல் அரிப்பை தடுக்க ரூ28 கோடியில் பாறாங்கற்கள் அமைப்பு எண்ணூரில் பணி தொடக்கம்**

திருவொற்றியூர், : எண்ணூர் பகுதி மீனவ குப்பங்களில் கடல் அரிப்பால் வீடுகள் பாதிக்கப்படுவதை தடுக்க ரூ.28 கோடியில் பாறாங்கற்கள் அமைக்கும் பணி நேற்று தொடங்கியது.
எண்ணூர் கடலோர பகுதிகளில் இந்திரா காந்தி குப்பம், சின்ன குப்பம், பெரிய குப்பம், நெட்டு குப்பம் என 10க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்கள் உள்ளன. இங்கு 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வசிக்கின்றனர்.
மழை காலங்களில் கடல் கொந்தளிப்பு, அரிப்பு காரணமாக மீனவர்களின் குடிசைகள் பாதிக்கப்படுகிறது. கடற்கரையோரங்களில் கடல் அரிப்பை தடுக்க பாறாங்கற்கள் போடப்பட்டன. அவை அலையில் கடலுக்குள் இழுத்து செல்லப்பட்டுள்ளன. இதனால், கடல் தண்ணீர் கிராமங்களில் புகுந்து விடுகிறது. இதை தடுக்க ஸீ28 கோடியில் கடல் அரிப்பு தடுப்பு பாறாங்கற்கள் அமைக்க அரசு திட்டமிட்டது. இதற்கான பணிகள் தொடக்க நிகழ்ச்சி நெட்டுக்குப்பம், தாழங்குப்பம், சின்ன குப்பம், பெரிய குப்பம் ஆகிய பகுதிகளில் நேற்று நடந்தது. எம்எல்ஏ குப்பன் தலைமை வகித்து, பணியை துவக்கி வைத்தார். கவுன்சிலர்கள் எழிலரசி, செல்வம் மற்றும் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

**மாவட்டத்தில் தடுப்பு நடவடிக்கை இதுவரை 2.21 லட்சம் கால்நடைக்கு கோமாரி தடுப்பு ஊசி போடப்பட்டது**

அன்னூர், : கோவை மாவட்டத்தில் இதுவரை 2.21 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடப்பட்டுள்ளது.
கோவை மாவட்டம் அன்னூர் - சாணாம்பாளை யம் உட்பட சில பகுதிகளில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்கம் மற்றும் அதன் அறிகுறி

காணப்படுகிறது. கால்நடை பராமரிப்புத்துறை கோவை இணை இயக்குனர் முத்துகோபாலகிருஷ்ணன் தலை மையில் சிறப்பு ஆய்வாளர் பெருமாள்சாமி, உதவி இயக்குனர் பழனிச்சாமி, ஆவின் உதவி பொதுமேலாளர் குப்பன், அன்னூர் கால்நடை உதவி இயக்குனர் தங்கவேலு, டாக்டர் வெள்ளிங்கிரி மற்றும் மருத்துவ அலுவலர்கள் குழு கோமாரி நோய் தாக்குதல் ஏற்பட்ட பகுதிகளுக்கு சென்று ஆய்வு நடத்தினர். நோய் பரவாமல் தடுக்க கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. நோய் தாக்கிய மாடுகளின் வாயில் இருந்து வடியும் நீரை ஆய்வுக்கு எடுத்துச் சென்றனர்.கோவை மாவட்ட இணை இயக்குனர் முத்துகோபாலகிருஷ்ணன் நிருபர்களிடம் கூறியதாவது: கோவை மாவட்டத்தில் மொத்தம் 2 லட்சத்து 32 ஆயிரம் கால்நடைகள் உள்ளன. 26.09.2013 முதல் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம்கள் அமைத்து 2 லட்சத்து 21 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. கால்நடைகளுக்கு கோமாரி நோய் இருப்பின் அது 60 கி.மீ தூரத்திற்கு பரவ வாய்ப்புள்ளது, அதனால் நோய் தாக்கிய கால்நடைகளுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். நோய் தாக்கிய கால்நடைகளை சுற்றிலும் பிளிச்சிங் பவுடரை போட வேண்டும். வாயில் புண் இருப்பின் காய்ச்சிய கஞ்சியை கொடுக்க வேண்டும். பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலை 4 சதவீதம் கொண்டு வாய் மற்றும் பாதங்களை நன்கு கழுவ வேண்டும். இந்த நச்சுயிர் கிருமி மாட்டு கொட்டகையில் 15 நாட்கள் உயிருடன் இருக்கும். எனவே கால்நடைகளை தனியாக வைத்து பராமரிக்க வேண்டும். கால்நடைகளுக்கு வருடத்திற்கு 2 முறை தடுப்பூசி போட வேண்டும். கோமாரி நோய் தடுப்பூசிக்கு 3 லட்சம் மருந்துகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**21.11.2013**

**கோவை மொத்த விற்பனை சந்தையில் தக்காளி விலை சீராக இருக்கும்**



கோவை,

ஏழைகளின் ஆப்பிள் என்று அழைக்கப்படும் தக்காளி, உலக அளவில் உருளைக்கிழங்குக்கு அடுத்தப்படியாக முக்கிய காய்கறியாக விளங்குகிறது. இந்தியா, சீனா, அமெரிக்கா, இத்தாலி, துருக்கி, எகிப்து போன்ற மாநிலங்களில் தக்காளி பரவலாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கடந்த 2010–11–ல் உலக அளவில் 4.75 மில்லியன் எக்டேர் பரப்பளவில், 159.34 மில்லியன் டன்கள் தக்காளி உற்பத்தி செய்யப்பட்டது.

<u>**தக்காளி உற்பத்தி**</u> உலக தக்காளி உற்பத்தியில் சீனா முதலிடத்தில் உள்ளது. அங்கு 32 சதவீதம் சாகுபடி செய்யப்படுகிறது. இந்தியா 2–வது இடத்தில் உள்ளது. இங்கு 9.47 சதவீதம் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த 5 ஆண்டுகளில் இந்தியாவில் தக்காளி சாகுபடி பரப்பளவு பெருமளவில் அதிகரித்து உள்ளது. இதன்படி கடந்த 2006–07–ம் ஆண்டில் 5.96 லட்சம் எக்டேராக இருந்த சாகுபடி பரப்பளவு, 2010–11–ம் ஆண்டில் 16.8 மில்லியன் டன்களாக உயர்ந்துள்ளது.

இந்தியாவில் ஆந்திராவில் 35 சதவீதமும், கர்நாடகாவில் 10.44 சதவீதமும் என முதல் 2 இடங்களில் உள்ளன. தமிழகம் 3.45 சதவீதம் உற்பத்தி செய்து 9–வது இடத்தில் உள்ளது. தமிழகத்தில் கோவை, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, தேனி

மாவட்டங்களில் தக்காளி சாகுபடி செய்யப்பட்டாலும், சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களே உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## தமிழகத்தில் சாகுபடி

சேலம் மாவட்டத்தில் மேட்டூர், ஏற்காடு, எடப்பாடி, ஓமலூர், ஆத்தூர், கெங்கவள்ளி, சங்ககிரி ஆகிய பகுதிகளிலும், தர்மபுரி மாவட்டத்தில் பென்னாகரம், அரூர், பாப்பிரெட்டிபட்டி, பாலக்கோடு, போச்சம்பள்ளி ஆகிய இடங்களிலும் தக்காளி அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

தக்காளி ஆண்டு முழுவதும் சாகுபடி செய்யப்பட்டாலும் சித்திரை, ஆடி மற்றும் கார்த்திகை பட்டங்களில் பரவலாக சாகுபடி செய்யப்படுகிறது. பின்னர் பிப்ரவரி, ஜூன், அக்டோபர் ஆகிய மாதங்களில் அறுடை செய்யப்படுகின்றன.

தமிழகத்தில் பிப்ரவரி மற்றும் அக்டோபர் மாத அறுவடையானது ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலங்களின் அறுவடை பருவத்துடன் ஒத்து இருப்பதால் ஒட்டன்சத்திரம் மற்றும் கோவை சந்தைகளுக்கு வரத்து அதிகமாக காணப்படும். இதனால் பண்ணை விலை வீழ்ச்சி அடைந்து காணப்படும்.

## விலை நிலவரம் ஆய்வு

தென் மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடக மாநிலங்களில் கடந்த சில மாதங்களாக நிலவி வரும் கடும் வறட்சி காரணமாக தக்காளி கிலோ ரூ.45 வரை விற்பனையானது. இந்தநிலையில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பருவமழை பெய்து வருவதால், அறுவடை நேரத்தில் தக்காளிக்கு என்ன விலை கிடைக்கும்? என்பதை அறிந்து கொள்ள விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர்.

இதைக்கருத்தில் கொண்டு வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையம் கடந்த 11 ஆண்டுகளாக கோவை உழவர் சந்தையில் நிலவிய தக்காளி விலை விவரங்களை ஆய்வு செய்தது. அதன்படி கோவை மொத்த விற்பனை சந்தையில் இந்த மாத இறுதிவரை, தக்காளியின் மொத்த விற்பனை

விலை கிலோவுக்கு ரூ.16 முதல் ரூ.20 வரை இருக்கும் என கண்டறியப்பட்டு உள்ளது.

<u>பருவமழை தீவிரம்</u>

ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை இன்னும் தீவிரம் அடையும் பட்சத்தில் விலை சற்று உயர வாய்ப்பு உள்ளது. கோவை சந்தையை ஒப்பிடும்போது ஒட்டன்சத்திரம் மொத்தவிலை சந்தையில் தக்காளி விலை கிலோவுக்கு ரூ.2 முதல் ரூ.5 வரை குறைவாக இருக்கும்



கொல்கத்தா,

அக்டோபர் 1 முதல் நவம்பர் 20–ந் தேதி வரை அரசு அமைப்புகள் 1.57 கோடி டன் நெல் கொள்முதல் செய்துள்ளன.பஞ்சாப் மாநிலத்தில்தான் அதிகபட்சமாக 1.19 கோடி டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அடுத்தபடியாக அரியானாவில் 35.58 லட்சம் டன்னும், தமிழ்நாட்டில் 75 ஆயிரத்து 152 டன்னும் கொள்முதல் ஆகியுள்ளது. உத்தரபிரதேசத்தில் 65 ஆயிரத்து 519 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளது.

கரீப் பருவம் என்பது ஜூன் முதல் அக்டோபர் வரையிலான காலமாகும். அறுவடைப் பணிகள் செப்டம்பர் இறுதியில் தொடங்கி அக்டோபர் மாதம் வரை நீடிக்கின்றன. எனினும் நெல் கொள்முதல் பருவம் அக்டோபர் 1–ந் தேதி அன்றே தொடங்கி விடுகிறது. இது அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதம் முடிய நீடிக்கிறது. கோதுமை அறுவடை பணிகள் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் நடைபெறுகின்றன. கோதுமை சந்தைப் பருவம் ஏப்ரலில் தொடங்கி மார்ச் மாதம் முடிய நீடிக்கிறது.

### நெல்லில் ஏற்படும் இலைநோயை கட்டுப்படுத்தும் மருந்து விற்பனை அதிகாரி தகவல்

நாகப்பட்டினம் சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நெல்லில் ஏற்படும் இலைநோயை கட்டுப்படுத்தும் மருந்து (சூடோமோனாஸ்) விற்பனை செய்யப்படுகிறது என்று வேளாண்மை ஒருங்கிணைப்பாளர் கூறினார்.

### <u>இலைநோயை கட்டுப்படுத்தும் மருந்து</u>

நாகை மாவட்டம் சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் சசிகலா ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தற்போது சூடோமோனாஸ் என்ற நன்மை செய்யும் எதிர்உயிரி விற்பனை செய்யப்படுகிறது. இது நெல்லில் ஏற்படும் பாக்டீரியஸ் இலைக் கருகல் மற்றும் இதர நோய்களை கட்டுப்படுத்த சிறந்தது ஆகும். மேலும் பயிரின் வளர்ச்சியையும் ஊக்குவித்து நல்ல மகசூல் பெற உதவும்.

தற்போது மழைக்காலம் ஆரம்பித்து உள்ளதால் நோய் வருவதற்கான சாதகமான சூழ்நிலை நிலவி வருகிறது. எனவே இதனை ஏக்கருக்கு 1 கிலோ அளவில் 20 கிலோ எரு அல்லது மணலுடன் கலந்து தெளிக்கலாம். இதன் விலை கிலோ ரூ.75 ஆகும்.

### <u>தென்னைக்கு ஊட்டச்சத்து</u>

இதேபோல் தென்னைக்கு வேர்மூலம் செலுத்தக்கூடிய டி.என்.ஏ.யு. தென்னை டானிக் லிட்டர் ரூ.250–க்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த டானிக் தென்னையில் ஏற்படும் பல்வேறு ஊட்டச்சத்து குறைபாடுகளை நிவர்த்தி செய்ய பயனுள்ளதாக இருக்கும். குறிப்பாக குரும்பை உதிர்தல், ஒல்லிக்காய் போன்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்து வளர்ச்சியை ஊக்குவித்து அதிக மகசூல் தரவல்லது.

இதனை வேர் மூலம் செலுத்தி தக்க பயனை அடையலாம். மேலும் நிலையத்தில் நெட்டை ரக தென்னங்கன்றுகள் விற்பனைக்கு உள்ளது. இந்த தென்னங்கன்று ஒன்றின் விலை ரூ.30 மட்டுமே ஆகும். எனவே விவசாயிகள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி பயன்பெறலாம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் தீவிரமாக நெல் நாற்று நடவு செய்து வரும் விவசாயிகள்**



நெல் நடவு செய்யும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருவதை படத்தில் காணலாம்.

கரூர்,

## <u>விவசாயம்</u>

கரூர் மாவட்டம் விவசாயத் திற்கு பெயர் பெற்ற மாவட்டம். இந்த மாவட்டதில் காவிரி, அமராவதி, நங்காஞ்சி, நொய்யல் ஆகிய ஆறுகளும் மற்றும் பல காட்டாறுகளும் பாய் கின்றன. கடந்த 25 ஆண்டுக்கு முன்பு விவசாய த்தை மட்டும் நம்பி வாழ்ந்த மாவட்டம் கரூர் மாவட்டம் ஆகும். ஆனால் காலபோக்கில் கரூரில் பருவ மழை ஏமாற்றிய காரணத்தாலும் தொழில் வளர்ச்சி காரணமாக வும், விவசாயத்தை நம்பி வாழ்ந்த மக்களின் அளவு குறைந்து கொண்டே சென்று விட்டது. கரூர் மாவட்டத்தில் பிரதானமாக பாயும் அமரா வதி ஆற்றை நம்பி சுமார் 25 ஆயிரம் ஏக்கரும், காவிரி ஆற்றை நம்பி சுமார் 35 ஆயிரம் ஏக்கரும் விவசாயம் செய்யப்படுகிறது.

## <u>பிற பாசனங்கள்</u>

கரூர் பகுதியில் வாழும் விவசாயிகள் கடின உழைப் பிற்கு பெயர் பெற்றவர்கள். அதற்கு உதாரணமாக அரவக் குறிச்சி மற்றும் கே. பரமத்தி பகுதியில் சுமார் 1000 அடிக்கு மேல் ஆழ் குழாய் கிணறு அமைத்து அந்த நீரை கொண்டு விவசாயம் செய் கின்றனர்.

தற்போது கூட கரூரை சுற்றியுள்ள மின்னாம் பள்ளி, அரசு காலனி, உப்பிடமங்கலம், ஜெகதாபி, சுண்டு குழிபட்டி , தரகம்பட்டி, சேங்கல் ஆகிய பகுதிகளில் கிணற்று நீரை நம்பி விவசாயம் செய்கின்ற னர்.

தற்போது கரூரை சுற்றியுள்ள பஞ்சமாதேவி அருகே நூற்றுக்கணக்கான ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப் பட்டுள்ளது. இந்த நெல் சாகுபடி கிணற்று நீரை நம்பி செய்துள்ளனர். மேலும் தற்போது போதிய அளவு மின்சாரம் இல்லாத காரணத்தால் விவசாயிகள் டீசல் எந்திரம் மூலம் தண்ணீர் பாய்ச்சுகின்றனர்.

<u>நம்பிக்கையில் நெல் நடவு</u>

போதி மழை இல்லாததால் பஞ்சாமாதேவி பகுதியில் நெல் விவசாயம் செய்துள்ள ஒரு விவசாய மூதாட்டி கூறும்போது , மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் எங்கள் வயலில் கிணற்று தண்ணீரை டீசல் மோட்டார் மூலம் பாய்ச்சி நெல் நாற்று நடவு செய்து உள்ளோம். தற்போது மழை பின்வாங்கி கொண்டே இருக்கிறது. மழை பெய்யாதால் தான் நாங்கள் தப்பித்தோம். இல்லை என்றால் பெரும் சிரமத்திற்கு உள்ளாக வேண்டியது இருக்கும்.

சென்ற ஆண்டும் போதிய பருவமழை இல்லாமல் விவசாயத்தில் பெரும் நஷ்டம் ஏற்பட்டது. இந்த ஆண்டு மழை பெய்யும் என்ற முழு நம்பிக்கையுடன் கடன் வாங்கி நடவு செய்து உள்ளோம். ஆனால் போதிய மழை இதுவரை பெய்ய வில்லை என்று கவலையுடன் இருந்து வருகிறோம் என்றார். மேலும் நல்ல மழை பெய்யும் என்ற நம்பிக்கையில்தான் எங்கள் வயலில் நெல் நாற்று நடவு பணி தீவிரமாக நடந்து வருகிறது என்றார்.

<u>குறைவான பருவமழை</u>

கரூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு சராசரி மழை அளவு 65. 5 சென்டி மீட்டர் ஆகும். கடந்த 2012-ம் ஆண்டு பெய்த மழை அளவு 28.5 சென்டி மீட்டர். ஆனால் தற்போது நிலவரப்படி கரூர் பகுதியில் 10. 2 செட்டி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

மாவட்டத்தில் அதிக படியாக பஞ்சப்பட்டி, தோகை மலை, பாலவிடுதி ஆகிய பகுதிகளில் இதுவரை தலா 25 சென்டி மீட்டர் மழை பெய்துள்ளது.

மேலும் சின்னதாராபுரம், ஏலவனூர், கே. பரமத்தி, தென்னிலை ஆகிய பகுதிகளில் இதுவரை 6 சென்டி மீட்டருக்கும் குறைவாகவே பெய்துள்ளது. இதனால் பனை மற்றும் தென்னை மரங்கள் அதிக அளவில் காய்ந்து போய் உள்ளன.

<u>குறைவான மழைக்கு</u>

கரூர் மாவட்டத்தில் கடந்த 2007ம் ஆண்டு மிகபெரிய வெள்ளம் சேதம் எற்பட்டது. அதில் அமராவதி ஆற்றில் மட்டும் சுமார் 3 லட்சத்திற்கும் கன அடிக்கும் அதிகமான அளவு தண்ணீர் சென்றது. ஆனால் கடந்த 7ஆண்டாக அமராவதி ஆற்றின் இரண்டு பக்கமும் தண்ணீர் தொட்டு செல்லும் அளவிற்கு தண்ணீர் செல்லவில்லை.

<u>விவசாயிகள் கவலை</u>

தமிழகத்தின் பல பகுதிகளில் இதுவரை இல்லாத அளவிற்கு மழை பெய்துள்ளது. குறிப்பாக கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னால் மயிலாடு துறையில் ஒரே நாளில் 22 சென்டி மீட்டர் மழை கொட்டி தீர்த்துள்ளது. இதேபோல் கரூர் பகுதியிலும் மழை பெய்ய வேண்டும் என்று விவசாயிகள் ஏக்கத்தில் உள்ளனர். இயற்கையை யாரும் வெல்ல முடியாது என்பது எல்லோ ருக்கும் தெரிந்ததுதான்.

எனவே வருணபகவான் கண் திறந்து கரூர் மாவட்டத்தில் போதிய பருவ மழை பெய்ய வைத்து விவசாயிகள் மற்றும் பொது மக்களை மகிழ்ச்சி அடைய செய்ய வேண்டும். எல்லாம் இயற்கையின் கையில் என்று விவசாயிகள் கூறியுள்ளனர்